Vol. XXIX 1954—1955

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

இருபத்தோன்பதாம் சிலம்பு

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
லிமிடெட்.

வள்ளுவர் ஆண்டு
ககூஅரு—ககூஅசு

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.,
Thirunelveli. :: Madras-1.

All Rights Reserved]

'செந்தமிழ்ச் செல்வி'

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்

EDITORIAL BOARD MEMBERS

௧. திரு. டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள்,
எம்.ஏ., பி.எச்.டி., தமிழ்த்துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

௨. ,, 'சித்தாந்த கலாநிதி' வித்துவான், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழ் விரிவுரையாளர் தியாகராயர் கல்லூரி, மதுரை.

௩. ,, வித்துவான், மு. இராசாக்கண்ணனார் அவர்கள்,
பி. ஓ. எல். (ஆனர்ஸ்) எம். ஈ. எஸ்., அரசினர் கல்லூரி, சென்னை.

௪. ,, வித்துவான், பண்டித. கா. பொ. இரத்தினம் அவர்கள், பி.ஏ., (ஆனர்ஸ்), பி.ஓ.எல்.
அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, கொழும்பு.

௫. ,, 'சித்தாந்த பண்டிதர்' ப. இராமநாதபிள்ளை அவர்கள்,
கழகப்புலமையாளர்.

௬. ,, செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமிபிள்ளை அவர்கள்,
கழகப்புலமையாளர்.

உள்ளுறை

பக்கம்

அணங்கை வாழ்த்துவம்—பொன்னி, இரா. இளமுருகனார் ௩௨௩
அணுவுலகச் சிற்பி ஆல்பெர்ட் ஈன்ஸ்டீன்
—திரு. பி. எல். சாமி, பி.எஸ்ஸி ௪௨௯
அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாறு ௨௪௬
அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளிவிழாத் திருநாள்
—இதழாசிரியர் ௨௪௧
அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளிவிழாப் பாராட்டு
—கழகப்புலவர், சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராம
நாத பிள்ளை ௨௪௪
அலர் சுமந்து ஒழிக !—வித்துவான், திரு. செந்துறைமுத்து ௪௨௧
அறிவறிந்த மக்கட் பேறு „ „ ௧௨௩
அறிவினால் ஆயபயன்—நாகை. திரு. த. சி. வேலன் ௫௫௭
அறிவுக் கோயில் வாழ்க ! „ „ ௨௮௫
"அறுபகை அகற்றல்"—இனியன் ௧௫௯
அறுபதாம் ஆண்டுநிறை அணிவிழா வாழ்த்து—பெருநாவலர்,
திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார் ௩௩௭
ஆக்குக தமிழை ஆட்சி மொழியாய்—தி. நா. அறிவு ஒளி ௫௬௫
இயற்கையின் இயல்புகள்—திரு. ஆ. சேனாபதி ௫௪௪
இரங்கற்பா—செல்லூர்க்கிழார் ௩௦௦
இரகுவீரரும் தமிழும்—திரு. சாமி ௧௩
இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் வரலாறு ௨௫௫
இராசா சர். முத்தையச் செட்டியார் வரலாறு ௨௬௫
இலக்கியத்தில் இன்பச் சுவை—திரு. தி. வைரமுத்து ௪௨௭
உயர்திரு ரா. பி. சேதுப்பிள்ளை திருவம்மானை
—செல்லூர்க்கிழார். திரு. செ. ரெ. இராமசாமி
பிள்ளை ௪௩௧
உலகத்து இயற்கை—திரு. க. சுப்பிரமணியன், ௧௩௩, ௧௭௬
எண்ணிப் பார்மின் !—நாகை, திரு. த. சி. வேலன் ௩௮௦
எலியும் புலியும்—குடந்தை, திரு. சு. கண்ணன் பி. ஏ. ௨௧௧
எழுத்தும் புணர்ச்சியும்—செல்லூர்க்கிழார்,
திரு. செ ரெ. இராமசாமி பிள்ளை ௨௧௯
ஒப்பற்ற முப்பற்று—நாகை, திரு. வேலன் ௪௫
ஒருவனே தேவன்—திருவாட்டியார், கோ. பத்மாவதி
அம்மையார் பி. ஒ. எல் (ஆனர்ஸ்) ௩௨௪
கலைக்கோயில் வாழிய !—செல்லூர்க்கிழார்,
திரு. செ, ரெ. இராமசாமி பிள்ளை ௨௫௪
கலைப்பெருங் கோயில் வாழ்க ! „ ௨௮௬

கல்கியின் மறைவு—இதழாசிரியர் ௧௫௦
கவிமணி, தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் மறைவு —இதழாசிரியர் ௪௯
கவிமணி பிரிவிரங்கற்பா—நாஞ்சில், திரு. கா. கணபதி ௭௨
கவிமணி, தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் பிரிவு பற்றிய இரங்கற்பா—திரு. எ. வே. திருப்பதி ௧௩௬
கவிமணி, திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் மறைவுபற்றிய கையறுநிலை—வித்துவான், திரு. தி. மு. சங்கரலிங்கம் ௧௪௧
கவுந்தியடிகள்—வித்துவான், திரு ஆ. சிவலிங்கனார், மயிலம் ௧௧௩
கள்ளும் தூதும்—செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை ௪௦௫
காதற் கவற்சி—நெல்லை, திரு. க. சுப்பிரமணியன் ௧௪௦
காவியக் காதல்—திரு. பி. எல். சாமி, பி. எஸ்ஸி ௧௧௮, ௧௮௨
காவியத்தில் சில ஓவியங்கள்—திரு. த. வடிவேலன் ௭௩
கானல் வரி—வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனார், மயிலம் ௮௭, ௪௪௯
குமரிமுனை—திரு. செ. முத்துவீராசாமி நாயுடு பி. ஏ. ௪௫௩
குமரிமுனையில் கொடுந்தமிழ்—செல்வி, எஸ். ஜமலாதேவி ௫௬௧
குளவியும் தேனியும்—கோபாலை, திரு. வே. பெருமாள் ௩௩௬
குன்றக்குடி அடிகளார் எழுந்தருளல்—இதழாசிரியர் ௧௯௩
சித்தமருத்துவ மாநாட்டுப் பேருரை ௫௪௫
சிலப்பதிகாரம்-ஆராய்ச்சி விளக்கம்—துடிசைகிழார், அ. சிதம்பரனார் ௧௬௧
சிவஞானம் பிள்ளை அவர்கள்—இதழாசிரியர் ௪௮௫
சிறத்தல் கடனே—நாஞ்சில், திரு. கா. கணபதி ௪௫௨
சிற்றூர்க் காட்சிகள்—திரு ஆ. சேனாபதி, இளையான்குடி ௩௪௬
செய்திகளும் குறிப்புக்களும், ௪௬, ௯௫, ௧௪௩, ௧௯௦, ௨௩௮, ௩௩௮, ௩௮௫, ௪௩௩, ௪௮௨, ௫௩௧, ௫௭௮
செல்வர்களே!—நாஞ்சில், திரு. கா. கணபதி ௩௭௬
செல்வியே வருக! வருக!—வித்துவான், திரு. சி. இராமசாமி, வத்தலக்குண்டு ௨௨
செழுங்கலைக் கோயில் வாழ்க!—கழகப்புலவர் செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை ௨௮௩
சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் ௪௩௨
சேக்கிழார் திருமொழி உண்மை—சைவசித்தாந்த சண்டமாருதம் திரு. சோமசுந்தர நாயகர் அவர்கள் ௧௩௭
சேக்கிழார் திருமொழி உண்மை ௨௧௫
சேரர் மரபு—வித்துவான், சு. குமாரசாமி ஆச்சாரி M. A. ௫௩௮
சேனாவரையத்தில் 'செய்கு'—வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் ௭௭

சைவசமயமே சமயம்—இதழாசிரியர் ௩௪௧

சொல்லும் சொல்லாதோ கதை—திரு. பி. எல். சாமி, பி. எஸ்ஸி ௩௧௭

சோமசுந்தர பாரதியாருக்குப் பாராட்டு ௨௯௬

தண்டமிழ் வேலி—திரு. சே. சி. சேதுராமலிங்கம் ௫௨௪

தமிழகத்தில் இந்திமொழி—இதழாசிரியர் ௫௩௩

தமிழகத்தில் தமிழ்நிலை —திரு. ஔவை. சு. துரைசாமி பிள்ளை ௩0௧, ௩௭௩

தமிழர் மணம்—தென்னாப்பிரிகா—டர்பன், ச. மு. பிள்ளை ௧௩௪

தமிழாட்சி—திரு. மா. ரா. வஞ்சிக்கோவன் ௪௪௫

தமிழில் வழிபாடு—இதழாசிரியர் ௪௩௭

தமிழில் வழிபாட்டுக்கும் எதிர்ப்பா ?—செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை ௫௪௯

தமிழ் அருச்சனை—சித்தாந்த பண்டிதர், கழகப் புலவர் திரு. ப. இராமநாத பிள்ளை ௫0௧

தமிழ் இசை பன்னிரண்டாம் விழா—செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை ௨௩௭

தமிழ் இசை வளர்ச்சி ௨௮0

தமிழ் எழுத்துக்களின் சிறப்பு—இராவ்சாகிப், டாக்டர் தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை, L.M.S.S A.M.R.A.S. (LOND) ௪௬௫, ௪௯௭, ௫௭௬

தமிழ்நாடே உலகின் கலைக்கோயில்—பேராசிரியர், திரு கா. பொ. இரத்தினம் எம்.ஏ., பி.ஓ.எல் ௪௭௭

தமிழ் புறக்கணிப்பா ?—செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை ௩௭௭

தமிழ்ப்புலவர் மாணவர் தேர்வு ௨௩௮, ௪௫௮

தமிழ்ப் பேராசிரியர் முத்துசிவனார் மறைவு—இதழாசிரியர் ௬௪

தமிழ் மகவு தாலாட்டு—புலவர், திரு. ராம பெரியகருப்பன் ௮0

தமிழ்மொழி ஆட்சி—செல்லூர்க்கிழார் ௫௨௮

தமிழ் வளர்ச்சி ௨௭௪

தலைமைப் பேருரை—தொகுத்தோர், திரு பழம்நீ ௨௩

தலையீந்த தமிழன்—தா. இளந்திரையன் ௫௬௩

தாய்க்கடன்—தென்னாப்பிரிக்கா-டர்பன், திரு. ச. மு. பிள்ளை ௪௭௪

திருக்குறள் தண்டபாணி விருத்தியுரை, ௧௭௭, ௨0௧, ௩௨௯, ௩௪௯, ௩௯௭, ௪௬௧

திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கட்குப் பாராட்டுப் பெருவிழா ௩௮௯

திருவாசகத் தேன்—செல்லூர்க்கிழார் ௩௫௬

திரு. வி. என். குமாரசாமியார் மறைவு—இதழாசிரியர் ௯௪

திரு. வி. க.·படத் திறப்பு—டாக்டர், திரு. மு. வரதராசனர் அக

தினையும் பனையும்—திரு. கரு. நாகரத்தினம், கணியூர் கஎரு

துடிசைகிழாரின் பேராவியற்கை—இதழாசிரியர் கசு அ

துடிசைகிழார் மறைவு குறித்த இரங்கற் பாக்கள்
—திரு. கோவைகிழார் உ௦௦

தேவாரத் தெள்ளமிழ்து—செல்லூர்க்கிழார்
திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை சு

நடுநிலை—நாஞ்சில், திரு. கா. கணபதி கஎச

நம் செல்வியின் புதிய ஆண்டு—இதழாசிரியர் க

நல்லிசை நிறுத்த வேண்டினல்
—குடந்தை, திரு. சு. கண்ணன் B.A. ருருரு

நால்வர் திருமணிமாலை—திரு. சிவாநந்த சுவாமிகள் சசுச

நெய்தலே நெய்தல்—வித்துவான், திரு. ப. சு. நடராசன் சசு௦

படித்தார் நிலையும், படிப்பார் நிலையும்
—நெல்லை, திரு. க. சுப்பிரமணியன் உகச

பரிபாடல் மாநாடு—இதழாசிரியர் உசுரு

பல்கலைக் கழகம் நீடுவாழ்க!—திரு. பாரதிதாசன் உஎஉ

பழுத்த புலமைப் பசும்பாவலர்—பேராசிரியர்
கா. பொ. இரத்தினம், எம்.ஏ., பி.ஓ.எல் ரு௦ரு

பாராட்டுப் பத்து—வித்துவான், திரு. செ. வேங்கடராமச்
செட்டியார் ருசுரு

பாராட்டுரை—திரு. V. ஆனந்தராசு, எம்.ஏ., எல்.டி.
தென்னார்க்காடு மாவட்டக் கல்வித்துறைத் தலைவர் சு௦

பாராட்டு வாழ்த்து மலர்—சென்னை மாணவர் மன்றத்
தினரும், சென்னைத் தமிழாசிரியர் கழகத்தினரும் ருசுசு

பாரியொடு மூவேந்தர் போர்—வித்துவான்,
திரு. செ. வேங்கடராமச் செட்டியார் ருஎ

பிரஞ்சு இந்தியா அன்றுமுதல் இன்றுவரை கசஉ

பிரஞ்சு இந்தியா விடுதலை—இதழாசிரியர் சுஎ

'புகழ் படைத்த காவலனே!'—திரு. புலவர் 'அரசு' கசு௦

புகழ் மொழிகள் உஅசு

புலவர் மாணவர் தேர்வு உருஅ

புளிய மரம்—திரு. சு. அ. இராமசாமிப் புலவர் கஅசு

பெரியோர் தூதுகள்—நாஞ்சில், திரு. கா. கணபதி உசுஎ

பெருங்காப்பியமும் தொடர்நிலையும்—திரு. நா. பார்த்தசாரதி உஅ

'பேபர்' என்னும் பூச்சிப்புலவர்—திரு. என். கே. வேலன் B A. ருஎக

பேராசிரியர் திரு. ஆ. முத்துசிவன்—பண்டிதர்,
திரு கா. பொ. இரத்தினம் எம்.ஏ , பி.ஓ.எல் சுக

பொங்கல் வாழ்த்து—செல்லூர்க்கிழார்,
திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை உஉஉ

பொங்குக இன்பப் பொங்கல்—திரு. சோ. ந. கந்தசாமி,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ௨௨௮

பொய்யில் மெய்யுரை—சித்தாந்த பண்டிதர்,
கழகப் புலவர், திரு. ப. இராமநாத பிள்ளை ௫

போற்றி வழங்கும் நெறி—திரு. தென்மொழி ஞான
பண்டிதன், ஆனைமலை ௪௯௬

மதிப்புரை ௪௮, ௬௯, ௧௪௪, ௧௬௧, ௨௩௬, ௩௪௦, ௩௮௯,
௪௩௫, ௪௮௩, ௫௨௬, ௫௭௯

மர மனிதன்—வித்துவான், திரு. செந்துறை முத்து ௧௫௩

மறப்பெண் மங்கையர்க்கரசி—புலவர், திரு. க. குமரன் ௧௦௧

மறைவுற்ற தமிழ் நூல்கள்—மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி ௩௩,
௯௫, ௧௦௯, ௧௯௬, ௨௨௬, ௩௦௬

மன்மத ஆண்டில் பிள்ளையார் சதுர்த்தி, நவராத்திரி, கந்தர்சட்டி
—டாக்டர், கணியர், திரு. இ. மு. சுப்பிரமணிய
பிள்ளை ௪௧௧

மாசித் திங்கள்—வித்துவான், திரு. நா. திருநாவுக்கரசு ௩௪௭

மீனாட்சிசுந்தரனார் வெள்ளிவிழா மாண்பு—இதழாசிரியர் ௧௪௫

மெய்ப்பொருள் நாயனார்—செல்லூர்க்கிழார்,
திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை ௫௧௭

மேலைநாட்டு மெய்விளக்கம்—திரு. சு. அன்புமலர் ௧௨௬, ௨௦௭
௩௨௫

வரவேற்புரை—டாக்டர், திரு. சிதம்பரநாதச் செட்டியார்
அவர்கள் ௧௭

வழிபாட்டு அடிப்படை—சித்தாந்த பண்டிதர்,
திரு. ப. இராமநாத பிள்ளை ௨௨௩

வழியனுப்பு வாழ்த்து—வித்துவான்,
செ. வேங்கடராமச் செட்டியார் ௩௭௨

வள்ளுவத்தில் மருத்துவம்—வித்துவான், செந்துறைமுத்து ௪௧

வள்ளுவர் நாள்—கழகப்புலவர், சித்தாந்த பண்டிதர்
ப. இராமநாத பிள்ளை அவர்கள் ௧௮௫

வள்ளுவர் வழிவந்த வள்ளல்—திரு. பி. எல். சாமி,
பி. எஸ்ஸி ௩௮௧

விஞ்ஞானச் செல்வி—இராசேசுவரி அம்மையார் பிரிவு ௨௬௮

வெள்ளிவிழா வாழ்த்து—நாஞ்சில், திரு கா. கணபதி ௨௯௪

வெள்ளிவிழா வாழ்த்துப் பாடல்கள்—பண்டித வித்துவான்,
திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் ௨௯௬

வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள்—தமிழ்மறைக் கழகத்
தலைவர், திரு. கா. பொ. இரத்தினம் ௩௮௪

படங்கள்

	பக்கம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கட்டிடங்கள்	௨௪௧
அண்ணாமலைப் பல்கலைக்கழக வெள்ளி விழாவின்போது (9-2-1955) கலந்துகொண்ட பெருமக்கள்	௨௯௬
இராசா சர். மு. அ. முத்தையா செட்டியார் அவர்கள்	௨௪௧
இராசா சர். முத்தையா செட்டியாரும் சோமசுந்தரபாரதியாரும்	௨௯௬
இராசா சர். முத்தையா செட்டியார் சோமசுந்தர பாரதியாருக்குப் பொன்னுடை போர்த்துச் சிறப்புச் செய்தல்	௨௯௬
க. அ. சிவஞானம் பிள்ளை	௪௮௫
கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி	௧௪௫
கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்	௪௯
காமராசரும் திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும்	௧௪௫
குன்றக்குடி அடிகளார் அப்பர் அச்சகத்துக்கு எழுந்தருளல்	௧௯௬
குன்றக்குடி அடிகளார் கழகத்துக்கு எழுந்தருளிய நினைவுக் காட்சி	௧௯௬
குன்றக்குடி அடிகளார் கழக விற்பனை நிலையத்திற்கு எழுந்தருளல்	௧௯௬
சர். சி. பி. இராமசாமி ஐயரவர்கள்	௨௪௧
செட்டிநாட்டரசர் உயர்திரு. மு. அண்ணாமலைச் செட்டியாரவர்கள்	௨௪௧
திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்க்கு திரு. ரா. பி. சேதுப் பிள்ளை பரிசு வழங்குதல்	௧௪௫
திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கட்கு நிகழ்ந்த பாராட்டுக் கூட்டம்	௬௮௯
துடிசைகிழார் அ. சிதம்பரனார்	௧௯௬
பரிபாடல் மாநாடு	௨௯௬
பன்மொழிப் புலவர், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்	௧௪௫
பேராசிரியர், லெ. ப. கரு இராமநாதன் செட்டியார் வரவேற்புரை வழங்குதல்	௨௯௬

செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௧	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௫, ஆவணி செப்டம்பர், 1954.	பரல் ௧

நம் செல்வியின் புதிய ஆண்டு

அருட்கு இருப்பிடனான எல்லாம்வல்ல சிவபெருமான் திருவருளால் நம் செல்விக்கு இருபத்தொன்பான் ஆண்டு துவங்குகின்றது.

கடந்த இருபத்தெட்டாண்டுக் காலங்களில், நம் செல்வி, நாட்டுக்கும் மொழிக்குஞ் செய்துபோந்த தொண்டுகள் பலப்பல.

நாவீறுபெற்ற புலவர் பெருமக்களால் நம் செல்வி, அழகிய சுவைநலங் கனிந்த கட்டுரை அணிகள் பல பூண்டு, தமிழகம் முழுதும்—கடல்கடந்த தமிழர் வாழுமிடமெங்கும்—சென்று சென்று, தன் செவ்வியைச் செல்வி பரப்பிப் போதருவாளாயினாள்.

நம் செல்வியைப் போற்றி வளர்த்த—வளர்க்கின்ற—வளர்க்கும் பெருமை அருட்செல்வர்க்கும், பொருட் செல்வர்க்கும் ஏற்ற பெரும்பணியாகும். கடந்த இருபத்தெட்டாண்டுக் காலங்களிலும் இவர்கள் தந்த அன்பும் ஆதரவும் மிகப்பெரிதாகும். இவர்களின் பேராதரவுப் பெருக்கால் நம் செல்வி, நாளொரு வண்ணமும் வனப்பும் பெற்றுப் புத்தாடையோடு புதுவணியுங்கொண்டு போதருவாளாயினாள். இத்தகைய அரும்பெறல் எம் தமிழக நல்லோர்க்கு எம் உளங்கனிந்த அன்பு கலந்த நன்றியுடன் மகிழ்வுரையையும் கூறி வாழ்த்துகின்றோம்.

கடந்த ஆண்டில் எம் செல்வி, அரிய சிறந்த சீரிய கூரிய தீஞ்சொல் வளனொடுகூடிய கட்டுரைகளைத் தாங்கி அன்பர்களின் நாவகத்தும் நெஞ்சகத்தும் உலவி நலம்பல புரிந்தாள்.

நம் செந்தமிழ்மொழி, பண்டைக்காலத்தில் மணிமுடிசூடி ஆட்சிபுரிந்த அரிய மொழி. அஃது, இதுகாலைத் தனக்கென ஓர் ஆட்சியின்றி, ஊர்ப்பிடாரி ஒண்டவந்த பிடாரிக்கு இடங் கொடுத்ததுபோல, வேற்று மொழிகள் வந்துவந்து ஆளும் மொழியாக அமைய, இது நாட்டில் நடமாடாது, வீட்டிலும் ஏட்டளவிலுமே நிற்கின்றது. இவ்விழுக்கு நம் மக்களின் விழிப்பற்ற நிலையேயென்பதை உணர்ந்து, வேற்று மொழிகளினால் நம் செந்தமிழ்ச் சொற்கள், வழக்காறற்றனவாக ஒதுக்கப் பெற்றனவென அவர்க்குத் தெருட்டி அவைகளையெல்லாம், மீண்டும் புதுவனவாகப் புதுக்கி எம் செல்வி ஆட்சிக்குக் கொணர்ந்தாள்.

தன்னுரிமையாக விளங்கும் நாட்டில், வேற்றுமொழி, இதுகாலை ஆட்சிமொழியாக வந்துளது. அது, தன்னுரிமை பெற்ற நாட்டுக்கு ஒவ்வாதது ; எனவே, நம் செல்வி, கடந்த ௨௮-ஆம் சிலம்பு ௫-ஆவது இதழில் 'தமிழ் ஆட்சிமொழி ஆகவேண்டும்' என்ற தலைப்பிட்டுக் கட்டுரை வரைந்து, நாட்டு மக்களுக்கு விழிப்பூட்டியது. அதன் பயனாகவே 20-12-1953-இல் சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில், சென்னை அண்ணாமலை மன்றத்தில் தமிழ் ஆட்சிமொழி மாநாடு நடைபெற்றது. அதற்கு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. ஆ. கசபதி நாயகரவர்கள் பி. ஏ., பி. எல்., எம். எல். சி. தலைமை தாங்கினார்கள். பல கட்சித் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து ஒரேமுகமாகத் தமிழ் மொழி ஆட்சிமொழியாக வேண்டுமென்ற அரிய கருத்தைச் சொற்பொழிவு வாயிலாக விளக்கிப் பேசினார்கள். பல்லாயிரக் கணக்கான தமிழ்ப் பெருமக்கள் மாநாட்டிற் கலந்துகொண்டு தம் மகிழ்ச்சியையும் தமிழே ஆட்சிமொழி ஆகவேண்டுமென்ற கருத்தையும் தெரிவித்தனர்.

இம் மாநாட்டில் தமிழ் மொழிக்கும், தமிழ்நாட்டுக்கும் இன்றியமையாத சிறந்த முடிபுகள் முடிபாக்கப்பெற்றன.

பின்னர்த் தமிழே ஆட்சிமொழியாக வேண்டுமென்பதை வற்புறுத்தி 11-4-54-இல் பெண்ணாகடத்திலும், 30-5-54-இல் தூத்துக்குடியிலும், 31-5-54-இல் நெல்லையிலும் திரு. ஆ. கசபதி நாயகரவர்கள் தலைமையின் கீழ் மாநாடுகள் நடந்து பல அரிய பெரிய முடிபுகளை நிறைவேற்றின.

இவ்வாறு கிளர்ச்சி உண்டாதற்கும், அதனால் மக்களின் மன எழுச்சிக்கும் தூண்டுதலாக நின்றது, எம் செல்வியே யெனின் மிகையாகாது.

கடந்த ஆண்டில் எம் செல்விக்குப் பேரதிர்ச்சியை உண்டாக்கும் பல வருத்தச் செய்திகள் நிகழ்வுற்றன. தமிழ்த் தென்றல்—தமிழ்மொழியின் உயிர்நாடியாக இலகிய பெரியார் திரு. வி. க. அவர்கள் பெரும்பிரிவும், அதனையடுத்து அருங்கலைச் செல்வர், மகாமகோபாத்தியாய பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்களின் திடுமெனும் பிரிவும், பின்னர்ச் சைவ சித்தாந்தப் பேராசிரியர் திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்களின் பெருஞ்செலவும், கரந்தைக் கவியரசு திரு. ஆர். வேங்கடாசலம் பிள்ளையவர்களின் மறைவும், இரசிகமணி திரு. டி. கே. சிதம்பர நாத முதலியாரவர்களின் நீக்கமும், எம் கழக நிறைவேற்றுக் கழக உறுப்பினராகிய திரு. உடையப்பா அவர்களின் பிரிவும், எம் செல்வியின் இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினரும், பேரறிஞருமான திரு. தூ. சு. கந்தசாமி முதலியாரவர்களின் மறைவும் எம் செல்வியை நடுக்குறச்செய்தன. அவைகட்கெல் லாம் தலைப்பிலும் உள்ளிதழ்களிலும் தன் ஆரா அயராத் துயரினைக் கூறி எம் செல்வி வெளிப்போந்தாள்.

நம் செல்வியானவள், தமிழ் மொழிக்கோ, தமிழ் மக்களின் பண்பாட்டுக்கோ, நாட்டின் வரலாற்றுக்கோ பிறரால் ஊறு செய்யும், திரித்துக்கூறும் நிலை ஏற்பட்டால், உடனே அவை யிற்றைக் கடிந்து உண்மையை நிலைநிறுத்துவள்.

கடந்த ஆண்டில், ‘ஔவையார் திரைப்படம்’ செமினி திரைப்பட நிலையத்தாரால் எடுக்கப்பெற்றுத் திரையரங்கங்களில் உலாவியது மக்கள் யாவரும் நன்கறிந்ததே. அதுகாலை நம் செல்வி தலைப்பில், ஔவையார் திரைப்படத்தில் ஔவையார் வரலாற்றோடுகூடிய செய்திகளை மறைத்தும் திரித்தும் நடுவிகந்

தெடுத்த வரலாற்றைக் கண்டித்து 'ஒளவையார் திரைப்படம்' என்ற தலைப்பில் எழுதித் தமிழகம் உண்மையுணர வழி கோலியது.

'தமிழர் பேரவை' யெனப் பெயரிய ஓர் அவை தோன்று தற்கு எம் செல்வியே காரணமாகும். அது, தோன்றி நம் தமிழகம் தன்னுரிமை பெற்றுத் தனித்தமிழ் மாநிலமாக நாடு பிரிந்து மொழி, கலை, பண்பு, அறம், மறம், மானம் முதலிய சிறந்த தமிழர் பேரறங்கள் தழைப்ப உழைக்கும் பேரவையாக அமைந்து தொண்டாற்றி வருகின்றது.

இப் புத்தாண்டில் எம் செல்வி, அரிய கருத்து நயமிக்க கட்டுரையணிகள் தாங்கி, ஐந்திணை நெறியளாவி உலாவருவள். அவட்கு அறிஞர்களும், செல்வர்களும் ஆதரவுதந் துதவி அருளு மாறு வேண்டுகின்றோம்.

உலகில் எதற்கும் செல்வப்பொருள் இன்றியமையாதது; இதனானே, 'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னான் முடியும்' என்றருளினர் மணிமொழிப் பெருமகனார்.

எனவே, நம் செல்வியின் ஒவ்வொரு கையொப்ப நண்பரும், குறைந்தது தாம் ஒரு கையொப்ப நண்பரையாவது சேர்த் துதவினால் எம் செல்வி, செல்வச் செவிலியால் ஆக்கமும் ஊக்கமும் நிறைந்து வெளிவந்து தொண்டுகள் பல ஆற்றுவாள். அவ்வாறே அறிஞர்கள் கட்டுரை வழங்கி நம் செல்வியைப் புரந் தருளுமாறு பெரிதும் வேண்டுகின்றோம்.

வாழ்க வையகம்! வளர்க தமிழ்மொழி!

பொய்யில் மெய்யுரை

[சித்தாந்த பண்டிதர், கழகப் புலவர், திரு. ப. இராமநாதபிள்ளை]

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்."
—திருக்குறள், சுச.

இதன் கருத்து, தேவர்கள் உணவாகிய அமிழ்தினும் தவ மிருந்து பெற்றெடுத்த தமக்குத் துணையாம் மக்களின் சிறு கைகளான் அளாவப்பட்ட கூழ், மிகவும் இனிமை உடையது என்பதாம்.

அமிழ்து மருந்தெனவும், சாவா மருந்தெனவும் கூறப்படும். சாவா மருந்து - சாவாமைக்கு ஏதுவாகிய மருந்து.

கூழ் - எளிய உணவு. மக்கள் சிறுகை அளாவியகூழ் சிறந்த தென்பதும், அதுவே பெரும் பேறு என்பதும் வரும் புறநானூற்றுப் பாட்டான் உணரலாம்:

"படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெரும் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியுந் துழந்தும்
ரு. நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே."
—புறநானூறு, ககஅ.

பயக்குறை - நிறைபயனுவதற்கு வேண்டிய இன்றியமையாப் பொருள். பிள்ளைகள் கைபட்ட எளிய உணவும் மிக்க இன்பம் தரும். அவ்வின்பம் பெற்றோர்களைக் கழிமகிழ் செய்யும் சிறப்பால் மயக்கஞ் செய்யும் மாண்புடையதாகும். அதனால் ஆசிரியர் 'மயக்குறு மக்கள்' என்றனர்.

மக்கள், தம்மை ஈன்றோர்க்கு இம்மைப் புகழும் அம்மை அழியா இன்பும் அளிப்பவர் ஆவர். அவ்வுண்மை வரும் அகப்பாட்டான் உணரலாம்:

"இம்மை யுலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின் றெய்துப

செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே ஆகுதல் வாய்த்தனம்........." —அகம். ௬௬.

மனையறத்துக்கும் மாண்புறு நாட்டிற்கும் மாறிலா இன்பம் நல்குவது மக்களேயாகும். அவ்வுண்மை வரும் திருப்பாட்டுக்களான் உணரலாம் :

" மனையறத்தில் இன்பமுறும் மகப்பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலைநின்றே ஆடியசே வடிக்கமலம்
நினைவுறமுன் பரசமயம் நிராகரித்து நீறாக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றும் தவம்புரிந்தார்"
—௧௨. திருஞான—௧௧.

" மாதொரு பாக னார்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்தில் தோன்றி மேம்படு சடைய னாருக்கு
ஏதமில் கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானி யார்பால்
தீதகன்று உலகம் உய்யத் திருஅவ தாரம் செய்தார்."
௧௨. தடுத்—௩.

திருவள்ளுவ நாயனாரும்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை." —திருக்குறள்—௪௩.

என அருளிய திருப்பாட்டில் 'தென்புலத்தார்' என்பது ஒவ்வொருவரும் பிறந்த நாட்டின் பெருமக்களையே குறிக்கும். இறந்துபோய முன்னோர்களென்றோ, பிதிரர்கள் என்றோ கூறுவது ஏற்புடைத்தன்று. அறிவறிந்த மக்கள் குடும்பத்துள்ளாரை ஈடேற்றுவதுபோல் நாட்டிலுள்ளாரையும் ஈடேற்ற நற்பணி பலவும் புரிவர். இக்குறிப்புப் புலப்படுப்பதே 'அமிழ்தினும் ஆற்றஇனிது' என்னும் அருள்மொழி. அதனை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

'அமிழ்து' உயிர் உடலோடுகூடி வாழுங்கால் பசிநோயைப் போக்கும் உணவுக்குப் பெயராகும்; உள்ளம் உரனுடனும், ஊக்கத்துடனும் நிலைபெற உதவும் உறவோர்க்கும் பெயராகும்; ஒழுக்கம் நிலைபெற விழுத்துணை செய்யும் உயிர் உறவாம் காதலிக்கும் பெயராகும். 'பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணமும் சித்தமலம் அறும்வண்ணமும், சித்தம் சிவமாம் வண்ணமும், சிவன் அடியான் ஆம் வண்ணமும் செந்நெறி உணர்வினை நல்கும் பாங்கற்கும் பெயராகும்.

அஃது உடலோடு கூடிவாழுங்கால் உடனுறைந்து பணிவும் இன்சொல்லும் உடையராய்த் தணிவில் காதலுடன் ஈன்றார்

உவப்ப ஆன்ற பெருந்தொண்டாற்றும் மக்களுக்கும் பெயராகும். உடல் நீங்கிய காலத்து அவ்வுயிர் ஆண்டான் திருவடியை அணைந்து பேரின்பம் துய்க்குமாறு, பொதுவாக நாள்தோறும், சிறப்பாக ஆண்டுதோறும் சிவபெருமானை வேண்டி வழுத்தியும் நினைந்தும் வணங்கியும் வழிபாடியற்றும் வாய்மை நன்மக்கட்கும் பெயராகும்.

இவ்வுண்மை :

"உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்." —திருக்குறள், கக0சு.

என்னும் திருவள்ளுவ நாயனர் திருமறையால் உணரலாம்.

மேலும், வரும் திருப்பாட்டும் இதனை வலியுறுத்தும் :

"அங்கணன் எங்கள் அமரர்பெம்மான்
அடியார்க்கு அமுதன் அவனிவந்த
எங்கள் பிரானிரும் பாசந்தீர
இகபர மாயதோர் இன்பமெய்தச்
சங்கம் கவர்ந்துவண் சாத்தினோடும்
சதுரன் பெருந்துறை யாளிஅன்று
மங்கையர் மல்கு மதுரை சேர்ந்த
வகையறி வாரெம் பிரானுவாரே" —அ. திருவார்த்தை-க0

'சிறுகை அளாவிய கூழ்' என்பதன்கண் 'சிறுகை' என்பது பசிநோய் நீக்கும் உணவினைக் குறிக்குங்கால் பருவம் நோக்கிய சிறுகை என்றாகும். பேரின்பப் பெருவாழ்வைக் குறிக்குங்கால் நுண்மை அருள் ஒழுக்கம் என்றாகும். சிறுமை - நுண்மை. கை - ஒழுக்கம். தேவர்களுக்கு மக்கட்பேறின்மையும், தேவவுலகும் தேவப் பிறப்பும் உய்யக்கொள்ளும் தன்மை வாய்ந்தன அன்மையும் நூல்களான் அறியலாம். அதற்குமாறாக நிலவுலகமும் மக்கட்பேறும் சிவன்உய்யக்கொள்ளும் தன்மையன என்பதும் காண்கின்றோம். இவ்வுண்மை வரும் திருமுறைத் திருமாமறையினால் உணரலாம் :

"புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் அலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி எழுந்தரு ளாயே." அ. —திருப்பள்ளி-க0

'இப்பூமி சிவன் உய்யக்கொள்கின்ற' சிறப்பு வாய்ந்தது என்பது மேலைப் பெருமறை. இப்பூமி என்பது நால்வர் பெருமக்கள் தோன்றிய செந்தமிழ் நாடேயாகும். இந்நாட்டகத்துத் தான் திருக்குறள், திருமுறை, சித்தாந்தத் தொன்மறைகள் உலகப் பொதுஉண்மை நூல்களாக இன்றும் நின்று நிலவுகின்றன. 'சிவன்' என்னும் திருப்பெயரான் முழுமுதற் கடவுளைச் சிறந்து எடுத்து வழுத்தும் செந்நெறிச் சீர்மையும் இந்நாட்டகத்தேதான் உள்ளது. சிவன் என்னும் திருப்பெயர் எல்லா நன்மையும், எல்லா இன்பமும் ஒருங்கு வாய்ந்தவன் என்பதாகும். அத்தகைய வாய்ப்பு வேறு எந்நாட்டுக்கும் அமையப் பெற்றிலது.

இதுகாறுங் கூறியவாற்றால் மக்கட்பேறற்ற வானவர்கள் வருந்தியுண்ட வறிதாய அமிழ்தம் உண்டகாலத்து அன்னவர்க்குப் பொய்யாகத் தோன்றிய சிற்றின்பமேயாம். அது,

> 'விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும்
> உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்.'

என்னும் இளங்கோ அடிகளின் இன்மொழியால் உணரலாம். இதன் கருத்து விண்ணோர் அமுதுண்டும் மாண்டனர் என்பதேயாம். மாண்டபின் ஈடேற்றத்திற்குத் துணை செய்யும் மக்கட்பேறோ இல்லாதவர். அதனாலும் ஈடேற்றம் எய்தாதவராவர். மேலும் நீண்டநாள் தேவ உடற் சிறையிலுற்ற துன்பமேயல்லால் அவ்வமிழ்தாற் பெற்ற பயனென்?

மக்களைப் பெற்றவர்களாகிய மானிடர் அவர்தம் 'சிறுகை யளாவிய கூழால்' இவ்வுலக வாழ்க்கையின்பமும், அவர்தம் திருவருள் வேண்டுகோளால் சிவனடியின்பமும் சிதைவின்றிப் பெறுகின்றனர். அதனால், 'அமிழ்தினும் ஆற்ற இனிதே' என்பது ஒரு சிறிதும் ஐயமில் மெய்யுரையேயாம்.

தேவாரத் தெள்ளமிழ்து

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமிபிள்ளை]

அமிழ்து என்பது அவிழ் என்னும் சொல்லடியாகப் பிறந்த பெயர். இது அமுது அமிர்து அமிர்தம் அமுர்தம் எனப் பலவாறு திரிபுபட்டு வழங்கும். இதன் பொருள், சாவா மருந்தென்பது. இவ்வமிழ்தைத் திருப்பாற்கடலைக் கடைந்து எடுத்ததென்றும், இது, தேவர்கட்குச் சிறந்த உணவென்றும், இதை உண்பார்க்கு நரை திரை மூப்பு பிணி சாவு அணுகாதென்றும் புராணிகரும் புராணங்களும் கூறுப. இதன் திரண்ட பொருள், உடலை நெடு நாள் உலகில் நிலைத்திருக்கச் செய்யும் அரிய மருந்தென்பது மட்டும் தெளிவு.

ஆனால், நம் வள்ளுவப் பெருந்தகை, நீரையே அமிழ்தம் என்று குறிக்கின்றார். அவர் தாம் ஆக்கியருளிய குறள் நூலில், இரண்டாவததிகாரமாகக் காட்சியளிப்பது, 'வான்சிறப்'பெனப் பெயரிய அதிகாரமாகும். இதனைத் தோற்றுவாய் செய்யும் போதே,

> [1]"வானின்று உலகம் வழங்கி வருதலால்
> தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று"

'மேகத்தின்கண்ணிருந்து மழை பொழிந்து நீரைத்தந்து, அக் கொடையால் உலக உயிர்கள் நிலைபெற்று வருதலினால், அதனை அமிழ்தமென்று அறிக' என்பது, இதன் திரண்ட பொருள்.

எனவே, உலகம் நீரின்றி அமையாது; வாழுதல் ஒண்ணாது; நாம் கண்கண்ட பேரமிழ்தாக நமக்குக் கிட்டியிருப்பது நீரேயாகும். நீரின்றேல் எந்த உயிரும் வாழுதல் கூடுமோ? உண்டற்கு உணவும், ஏனையவற்றை ஆக்குதற்கும் நீரே நமக்கு வேண்டப்படுமன்றோ? இதனானே, பிறிதோரிடத்து வள்ளுவப் பெருமகனார் 'நீரின்றமையாது உலகு' எனவும் அருள்வாராயினர். நமக்கு உயிரையும் உடலையும் வளர்ப்பது, இவ்வமிழ்தொன்றே. கம்பநாடரும், கமலக்கண்ணனை இராமனைக் குடிமக்கள் கொண்டாடிய - அன்பு கொண்ட - நிலைக்கு 'உண்ணு நீரினும் உயிரினும் அவனையே உவப்பார்' என அரிய சீரிய கூரிய நேரிய ஏரிய கருத்தை அமைத்துணர்த்துவாராயினர். இதில் முதற்கண்

---

2. திருக்குறள்: கக.

'உண்ணுநீர்' என்று குறித்துப் பின்னர், 'உயிரினும்' எனக் குறித்தது, உயிரினும் உண்ணும் நீர் உயர்ந்தது; சிறந்தது என்னும் கருத்தைக் கொண்டன்றோ? ஊன்றி உணர்மின்.

இவ்வமிழ்தாகிய நீர், உடலைமட்டும் ஓம்புவது; ஆனால் உடலையும் உயிரையும் உணர்வையும் ஒருங்கே காக்கும், உயர்த்தும் ஓரமிழ்தம் உளது. அஃதே தேவாரமெனப் பெயரிய வான் அமிழ்து. அதனை ஈண்டுத் 'தேவாரத் தெள்ளமிழ்து' என்ற தலைப்பிட்டுக் குறித்தாம். அஃதோடு இதற்குத் 'தெள்' என்னும் அடை கொடுத்தது, அதன் சிறப்பு நோக்கி. சிறப்பு என்னை என வினவின்,

உலகில் உயிர்கள் தோன்றுகின்றன; வளர்கின்றன; சில செயல்களை ஆற்றுகின்றன; இறுதியில் மறைகின்றன; இவைகளை எண்ணின்-கூர்ந்து நோக்கின் - ஆராயின்-அஃதோர் காணத்தகு காட்சியாகவே தோன்றும். இவ்வுயிர்களுள் அறிவு திருந்தியனவும், திருந்தாதனவும் எனப்பட்டு விளங்குதலை நாம் காண்டுமன்றோ?

இவ்வறிவு உலகில் உண்டல் உறங்கல் புணர்தல்களோடு எல்லா உயிர்களிடத்தும் நிகழ்தலை நாடோறும் காண்கின்றோமன்றோ? இவ்வினைமைகளினின்றும் மக்களாக்கும் ஓர் அரிய அறிவு உளது. இதனைப் பெரியோர் 'மனனுணர்'வென்பர். மனனுணர்வு இல்லாத உயிர்களே இல்லையே எனக் கேட்பின், அஃது விரிவுபடவில்லை. பறவைகளை விலங்குகளை ஊர்வனவற்றைக் காணின், மேற்கூறிய உண்டல் முதலியவற்றிலேயே உழல்கின்றமையையே அறிகின்றோம். நல்லன தீயனவற்றை, அவை பகுத்தறியா. அவைகளைப் பகுத்தறியும் பேரறிவே மனனுணர்வென உயர்த்துக் கூறப்பெறும். இஃதே அன்பினின்றும் தோன்றி மலர்ந்து கனிவது; இவ்வன்பே இறை திருவருளைக் கூட்டுவது; இவ்வுலகைக் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும் ஒருவன் உளன் என உணரும் ஒட்பமுடையது; இவ் இறையுண்மையை, அவன்றன் பேரருட் பண்பினை உணர்த்தி, நம்மை உய்விப்பன மூவர் முதலிகள் அருளிய தேவாரத் திருமறைப்பாடல்கள். அதனானே 'தெள்ளமிழ்து' எனக் குறித்தாம். தெள்ளமிழ்து, தெளிந்த அமிழ்து; மாசுமறுவற்ற தன்மையுடையது என்பதுஅதன் திரண்ட பொருள்.

திருஞானசம்பந்தப் பெருமான் இறைவனை,

"[1] நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்

1. திருஞானசம்பந்தர் தேவாரம், பதிகம்: கூஅ : க.

சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன் உள்ளம் குளிருமே'

என்றருளுவதில் எல்லாம் வல்ல ஆண்டவனை நன்மையுடையான்; தீமையில்லான்; வெண்ணிற எருதையுடையான் என, அவன் றன் முழுமுதல் தன்மையை அளப்பரிய ஆற்றலைக் காண்டற் கரிய அவன் பெருமையைக் கண்கூடாகக் காண, மனவுணர்வாற் கண்டு மகிழக் கூறி, அவனை வாழ்த்த என் உள்ளங் குளிரு மென்று அருளி நம்மை இறையருளில் வழிப்படுத்துகின்றார்.

திருநாவுக்கரசு அடிகளாரும் இறைவனை,

[1]'பாரவன்காண் பாரதனில் பயிரா னான்காண்
பயிர்வளர்க்கும் துளியவன்காண் துளியி னின்ற
நீரவன்காண் நீர்சடைமேல் நிகழ்வித்தான்காண்
நிலவேந்தர் பரிசாக நினைவுற் றோங்கும்
பேரவன்காண் பிறையெயிற்று வெள்ளைப் பன்றி
பிரியாது பலநாளும் வழிபட் டேத்தும்
சீரவன்காண் சீருடைய தேவர்க் கெல்லாம்
சிவனவன்காண் சிவபுரத்தெம் செல்வன் தானே'

என, உலகமும் உலகைக் காக்கும் உணவும், அவ்வுணவை ஆக் கும் நீரும் இறைவனே எனக்குறித்து, ஆண்டவன்பால் மாறா இன்பத்தில் திளைக்க வைப்பதறிக.

நம்பியாரூரரும் இறைவனை,

[2]'பொன்னு மெய்ப்பொரு ளுந்தருவானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொ றுப் பானைப்
பிழையெ லாம்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னையெளி வந்தபி ரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலும் ஆமே.'

என, இறைவனை உலக வாழ்வுக்குப் பொன் முதலிய பொருள் களைத் தந்து பாதுகாக்கும் பேரருள் திறத்தையும், அறியாமை இருள்மலம் அறுத்துத் தம் திருவடிக்கண் பேரன்புடைமையாக் கும் திறத்தையும் தருபவனைக் குறித்து, நம்மை இறையருள் இன்பத் தொண்டராக்கும் அருள், வியந்து போற்றற்குரியதாம்.

1. திருநாவுக்கரசர், தேவாரம், பதிகம், ௩0க : கூ.
2. சுந்தரர் தேவாரம், பதிகம், ௫சு : க.

இன்னும் இவைபோன்ற அரிய பெரிய இறைவன்றன் ஆற்றலும் அருளும் காட்டி நாம் உய்யும் வண்ணம் மூவர்களும் அன்பையும் அருளையும் குழைத்துக் குழைத்துத் தாம் அருளிய தேவாரப் பாக்களில் பொதிந்து வைப்பாராயினர். இத் தெள்ளமிழ்தத்தை ஆர அயரப் பருகுபவர்க்குப் பிறவேறு பொருள்களும் வேண்டுங்கொல்? இவைகளை நாம் உளங் கரைந்து ஓதுவோமானல் கருங்கல் மனமும் கரைந்துகக், கண்கள் தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய, அன்பராவதொருதலை. அவ்வின்பத்தெள்ளமுதை உண்டு தேக்கி உள மகிழ்கூர வம்மின் உலகீரே! இஃதொன்றே பிறவிப் பெரும்பயன்.

"[1]வழங்குகின் றாய்க்குன் அருளார் அமிழ்தத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை யேனென் விதிமையின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத் தந்து உய்யக் கொள்ளாய்'

என, இறைவனை வேண்டுவோம், வம்மின்.

இத்தகைய தேவார அமிழ்து நமக்கிருக்கையில், இவைகளை ஓதி உளங்கரைந்து இறைவன்பால் உள்ளன்பு கொள்ளாது, நாம் வாளா காலங்கழித்து, 'கலகல கூஉம் துணை'யுடைய அறிவுசாலா நூல்களைப் படித்து வெற்றுரவாரம் செய்வதாற் பயனென்னை? பயன் தருவது, உயிருக்கும் உணர்வுக்கும் இத் தேவாரத் தெள்ளமிழ்தன்றே? இவைகளை முற்றுங் கற்றுப் பொருள் தெளிந்து இன்ப அன்பைப் பெறுவது நம் கடமையே.

தேவாரத்தைப் பண்ணொடு பயின்றோதுவார்க்கு மனத்தில் தூய்மையும் வாய்மை நெறியும் வந்தெய்தும்; அதனல் அவர் இடையறா இன்பில் திளைத்தல் ஒருதலை; கற்றதற்கும் கற்பதற்கும் பயன் இதுவேயாம். இஃதன்றி ஏனைய இன்பங்கள், நிலைபேறுடையன அல்ல. நிலைத்து நிற்பது, இறைவன் புகழ் சேர் பொருள் ஒன்றே;

"[2]காலமுண் டாகவே காதல்செய் துய்ம்மின்'

என்பது பேறிஞர் திருமொழி.

1, 2. திருவாசகம், அடைக்கல : ௪0. திருப்பாண்டி : ௭.

இரகுவீரரும் தமிழும்

[திரு. சாமி]

மலேயைக்கல்லி எடுத்த எலி

மலேயைக்கல்லி எடுத்த எலியைக் கண்டால் யாவரும் நகைப்பர். அதுபோல டாக்டர் ரகுவீரர் என்பார் அண்மையில் சென்னையில் நடந்துகொண்டார் ஆங்லத்திந்திய அகராதியை வெளியிடும் ஆற்றலும் அறிவும் துணிவும் உள்ள பேரறிஞர் இரகுவீரர், தமிழெனும் அளப்பருஞ் சலதியைக் கரைகண்டவர்போல் தமிழின் சொல்லாற்றலைப்பற்றி ஒரு மாபெரும் உண்மையை வெளியிட்டிருக்கிறார். 'இந்தி மொழிக்குள்ள சொல்லாற்றல் தமிழுக்கில்லையாம். தமிழ்நாட்டில் தமிழைப் பற்றித் தப்பாகச் சொன்னதைத் தடுத்துப்பேச மார்தட்டிவந்த ஒரே ஒருவர், 'மார்' என்ற வெளிநாட்டறிஞர்தான். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இலக்கிய இலக்கணங்களோடு வளர்ந்த தமிழின் சொல்லாற்றல் இந்தியைவிடக் குறைவாம். ஆங்லத்திந்திய மொழிகளின் அகராதி வெளியிட்டவருக்குத் திராவிட மொழிகளில் முதல் மொழியான தமிழைப்பற்றித் தெரிந்த அளவைப் பாருங்கள்!

எங்கள் குடும்பம் பெரிசு

மார்துரை அறிந்த அளவு இரகுவீரர் அறியாதிருப்பது வியப்பைத் தருகிறது. 'இந்து'வில் மார்துரை எழுதினதற்கு மறுப்புக் கூறும்போது மற்றொரு மாபெரும் உண்மையை இரகுவீரர் திருவாய்மலர்ந்தருளினார். இந்தியில் தமிழில் இருப்பதைவிட சொற்கள் கூடுதலாம். அஃது எப்படியென்றால் இந்திச் சொற்களையும் அதன் தாய்மொழியான வடமொழிச் சொற்களையும் சேர்த்துக்கூட்டிப் பாருங்கள் என்கிறார். என்ன கணக்கு! எங்கள் குடும்பம் பெரிசு என்பதற்கு இறந்துபோன பாட்டன் பூட்டன்களையும் கணக்கிடுவது போலல்லவா இருக்கிறது! இவருடைய கணக்குப்படி ஆங்கிலம், லத்தீன், கிரேக்க மொழிகளிலுள்ள சொற்களையெல்லாம் கூட்டி 'எங்கள் குடும்பம் பெரிசு பெரிசு' என்று பாடலாம். தமிழ்கூடத் திராவிட மொழிகளின் சொற்கூட்டத்தையெல்லாம் சேர்த்துக் கணக்குக் காட்டலாம். ஆனால், இம்முறையில் உயிரில்லாத சொற்களை உயிருள்ள மொழியின் சொற்களாகக் கூறுவது அறிஞர்களின் கருத்தன்று.

செல்லாத காசு

காசுகளை இயந்திரத்தில் அடித்து அனுப்பும்போது செல்லாத காசுகளும் வெளிவருமாம். டாக்டர் இரகுவீரருக்கு இந்தச் செல்லாத காசுகளே செல்லுபடியாகத் தெரிகிறது. இரகுவீரர் ஒரு அனைத்திந்திய கலைச்சொல் தொழிற்சாலையை நாகபுரியில் வைத்திருக்கின்றார். அத் தொழிற்சாலையில் ஆயிரக்கணக்கான கரடுமுரடான, வாயில் வராத, நாவில் நடமாடாத, பல்லை உடைக்கும் வடமொழிச் சொற்களை இந்திக் கலைச்சொற்கள் என்ற பெயர்கொடுத்துத் தள்ளியிருக்கிறார். அவைகளைப் படித்த அறிஞர்கள், அரசியல் தலைவர்கள் பொருள்புரியாது திகைக்கின்றனர். பழக்கமில்லா, வாய்க்கு வராத சொற்கள் செலாவணியாகாத காசுகள் போன்றன. இந்தச் செல்லாக் காசுச் சொற்களையும், வழங்காத வடமொழிச் சொற்களையும் சேர்த்துத்தான் இரகுவீரர் 'எங்கள் குடும்பம் பெரிசு' என்று பாடுகிறார்.

குவியலும் அவியலும்

இந்த வடமொழிச் சொற்குவியலைத் தமிழ்க் கலைச்சொல்லாக ஏற்றுக்கொள்ளலாம் என்று வேறே எழுதியிருக்கிறார். இதைச் சொல்ல இரகுவீரர் வேண்டுமா? தமிழ்நாட்டில் இல்லையா, இதே கருத்துடன் வேலைசெய்யும் அறிஞர்கள்? அந்த அறிஞர்கள் 'ஜலபாதை' 'மச்ச சேத்திரம்' போன்ற அருமையான சொற்களைத் தமிழ்த்தாய்க்கு 'அர்ப்பணிக்கவில்லையா?' அண்மையில் தினமணி ஞாயிறுமலரில் எழுதிய எழுத்தாளர் சங்கத் தலைவர் 'இந்தியக்கலை' என்ற மதிப்புரையில் 'ஆந்தரமான,' 'மனித சரீர உறுப்புகளின் ஸௌஷ்டம்,' 'ஜீவிதமான' என்ற மணியான அருமையான சொற்களைத் தமிழுலகிற்குக் 'கடாட்சித்திருந்தார்.' இந்த முறையான 'கிருபாகடாட்சத்திற்கு' இரகுவீரர் தேவையில்லை. எத்தனையோ இரகுவீரர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். மேலே காட்டிய சொற்களை எத்தனை படித்த அறிஞர்கள் புரிந்துகொள்வர்! ஆயினும் அதை எழுதியவர் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர், பேசுவதுபோல் எழுதுபவர்!

அடுத்து இரகுவீரர் மற்றொரு அருமையான கருத்தை வெளியிட்டுள்ளார். குவியலை ஏற்றுக்கொள்ளாவிடில் அவியலையாவது ஏற்றுக்கொள்ளுங்கள் என்கிறார். வடசொற்களையும் தமிழ்ச்சொற்களையும் சேர்த்துக் கலைச்சொல்லாக்கம் செய்துகொள்ளுங்கள் என்கிறார். இம்முறையான மணிப்பிரவாளத்தின் கதி என்னவாயிற்று என்று தெரிந்திருந்தால், இந்த அவி

யல் கருத்தை வெளியிட்டிருக்கமாட்டார். இந்த அவியற் சொற்களைப் படைத்துக் குவிக்க எத்தனையோ எழுத்தாளர்கள் தமிழ்நாட்டில் உளர். ஆதலின் அதுவும் புதிதல்ல. இறுதியில் அவரே வழிக்கு வருகிறார். இந்த இரண்டு முறையும் பிடிக்கா விட்டால் தனித்தமிழ்ச் சொற்களையே வைத்துக் கொள்ளுங்கள் என்கிறார். ஆனால் இதுவும் புதிதல்ல. இவர் சொல்வதற்கு முன்னரே பலர் இங்குச் செய்து வருகிறார்கள். இந்த அடிப்பட்ட கருத்துகளை இரகுவீரர் சொல்லித்தான் தமிழர் தெரிந்து கொள்ளவேண்டியதில்லை.

இந்தி வெறி

வடமொழியை அடிப்படையாகக் கொண்ட இந்தியக்கலைச் சொற்களை உண்டுபண்ணி அதை இந்தியாவிலுள்ள எல்லா மொழியினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சில அறிஞர் கள் சொல்லிவருகின்றனர். இந்தக் கலைச்சொற்கள் தமிழைப் பொறுத்தவரை கொலைச் சொற்களாகவே இருக்கும். தெலுங்கு, மலையாளம் பேசுவோர் ஏற்றாலும் தமிழர் இதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆனால் தனித்தமிழ்ச் சொற்களை வேண்டாம் என்றும் புரியாதன என்றும் புறத்தொதுக்கிய எழுத்தாளர்கள் இக்கலைச்சொற்களை எதிர்த்துப் பேசாதது ஏன்? புரியாத ஒரே காரணத்தால் தனித்தமிழை எதிர்த்த இந்தப்பிரகிருதிகள், புரியாத வடமொழிக்கொலைச் சொற்களை' மட்டும் எதிர்க்காதது ஏன்? அஞ்சல், புகை வண்டி நிலையங்களில் பயன்படும் பொருள் களில் இந்தியில் எழுதப்படுவதை எதிர்க்காதது ஏன்? புரிவதற் குத்தான் சொற்கள் என்று சொல்லுவோர், புரியாத இந்திச் சொற்கள் அஞ்சல் நிலையத்தில் வாங்கும் பொருள்களிலெல்லாம் இருப்பதை எதிர்க்காதது ஏன்? புரியாத தனித்தமிழை எதிர்த் தார்கள், ஆனால் புரியாத வடமொழி, இந்திச் சொற்களை எதிர்க் கவில்லை. காரணம் இவர்கள் உள்ளூர என்றுமே வடமொழி யை உயர்வாகவும் தமிழை அதனினும் தாழ்வாகவும் கருதி வந் ததுதான்.

அளகேசனார் 'அளந்து' கிளந்தது

அரசியலில் ஈடுபட்டோர் மொழித்துறையில் புகும்போது என்னமோ வாய்க்கு வந்ததெல்லாம் பேசுகின்றனர். தமிழில் 'ழகரம்' வேண்டியதில்லை. னகர ணகர வேற்றுமையை எடுத்து விடலாம். ளகர, லகர வேற்றுமையையும் ஒழித்துவிடலாம். ஏன் தமிழை ரோமன் எழுத்திலேயே எழுதலாம்; இப்படியெல் லாம் அளகேசனார் தில்லியில் பேசியுள்ளார். சிறப்பு 'ழகரம்' தமிழுக்குரியதல்லவாம், அதைத் தமிழரே ஒழுங்காக ஒலிப்ப

தில்லையாம். அதுவே 'ழகரம்' தமிழுக்குப் புறம்பானது என்பதைக் காட்டுகிறது என்கிறார். ழகரத்தை எடுத்துவிட்டு அல்லது லகர ளகர னகர ணகர வேற்றுமையை அகற்றிவிட்டு எந்த இலக்கியத்தை அளகேசனார் படிக்க முடியும்? இவ்வெழுத்துக்களையுடைய அடிப்படையான சொற்கள் தமிழில் ஆயிரக்கணக்கில் இருக்கும்போது அவ்வெழுத்துக்களை எப்படி மாற்றிப் படிக்கமுடியும். இலக்கிய வளமில்லா மொழிகளில் இந்த மாற்றங்கள் பயன் தரலாம். ஆனால் இலக்கிய வளமுள்ள மொழியில் இந்த மாறுதல் ஒரே குழப்பத்தில் ஆழ்த்திவிடும். ரோமன் எழுத்தில் தமிழை எழுதுவதில் ஒரு பயனும் இல்லை. இம்முறை எழுத்தே இல்லாத மொழிகளுக்குப் பொருந்தும். ஆனால் பண்பட்ட, இலக்கிய இலக்கணமுடைய மொழிகளுக்குச் சிறிதும் பயன்படாது. இவர்களின் சீர்திருத்தம் மொழியின் அடிப்படையில் கைவைப்பதால் இதனால் யாதொரு பயனும் இல்லை.

இந்தியா என்றுமே ஒரேமொழியுடனோ, ஒரே பண்பாட்டுடனோ, ஒரே நாகரிகத்துடனோ, ஒரே அரசியற்கீழோ இருந்ததில்லை. ஆதலின், இந்திய ஒருமைக்காக ஒரே கலைச்சொல்லாக்கத்தையோ, ஒரே வடமொழிப் பண்பாட்டையோ, நாகரிகத்தையோ, ஒரே நாகரி எழுத்தையோ, ரோமன் எழுத்தையோ ஒரே மொழியையோ புகுத்த முயலும் அரசியலாரும் அறிஞர்களும் மேற்காட்டிய அடிப்படை உண்மையை உணர்வதில்லை. இவர்கள் முயற்சிகள் பிரிவியக்கங்களை இந்தியாவில் பெருகச் செய்யுமே அன்றி, ஒற்றுமையை உண்டுபண்ணாது. அதனால் டாக்டர் இரகுவீரர் போன்ற அறிஞர்கள் ஒரே கலைச்சொல்லாக்கத்தையோ, ஒரே நாகரி எழுத்தையோ, ஒரே மொழியான இந்தியையோ புகுத்துவதை இனி நிறுத்திக் கொள்ளல் வேண்டும்.

[1]'சொல்லென்னும் பூம்போது தோற்றிப் பொருளென்னும்
நல்லிரும் பூந்தாது நாறுதலால்—மல்லிகையின்
வண்டார் கமழ்தாமம் அன்றே மலையாத
தண்டாரான் கூடல் தமிழ்.'

---

1. மதுரைக்காஞ்சி இறுதி வெண்பா.

வரவேற்புரை*

[டாக்டர், திரு. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள்]

தமிழ்ப் பெருமக்களே, தமிழாசிரிய நண்பர்களே, கல்வி அமைச்சர் அவர்களே, தலைமை தாங்க வந்திருக்கும் பேராசிரியர் அவர்களே, உங்கள் அனைவீருக்கும் என் அன்பும் வணக்கமும் உரிய ஆகுக. இந்த இரண்டாவது மாநிலத் தமிழ் ஆசிரியர் மாநாட்டுக்கு வந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்புக் குழுவின் சார்பில் வரவேற்கின்றேன். இம்மாநாடு இம்மாவட்டத்தில் நடத்தப் பெறவேண்டும் என்ற சென்னை மாவட்டத் தமிழாசிரியர் கழக வேண்டுகோளை யொட்டி இங்கு இதனைக் கூட்டியுள்ளோம். இந்த மாநாடு தில்லையின் எல்லையிலே நடைபெறுவது மிகவும் பொருத்தமுடையது ஒன்று. தமிழிலே பெருவிருப்பமுள்ள தில்லைக் கூத்தன் அண்மையில் நடமாடுவது அன்றியும், இங்கே ஒரு கலைக்கோயிலைச் செட்டிநாட்டு அரசர் சர். மு. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் எழுப்பி இருக்கின்ற காரணத்தாலும், தமிழுக்குப் பெருமையும் சிறப்பும் அளிக்கின்ற பல்கலைக் கழகமாக இஃது அமைந்திருக்கின்ற காரணத்தாலும், செட்டிநாட்டரசர் சர். முத்தைய செட்டியாரவர்களுடைய பேராதரவினால் தமிழாசிரியர்கள் அனைவரும் ஏனைய ஆசிரியர்களுக்கு ஒப்பாக மதிக்கப்படும் பெருமையுடைய பல்கலைக் கழகமாக இஃது இருக்கின்ற காரணத்தாலும், இவண் இம்மாநாடு கூட்டப்படுதல் மிகப் பொருத்தமானதே. தமிழினிடத்தில் மிக்க பற்றும் அன்பும் உடைய கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் இம்மாநாட்டினைத் திறக்க இசைந்திருப்பது பொருட்டு அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றேன். அண்மையில், கலைக்களஞ்சிய முதல் சம்புடத்தை வெளியிட்டபொழுது மாண்புறு கல்வி அமைச்சர் ஆற்றிய விரிவுரையில், தமிழ் மொழியிலேயே எல்லாப் பாடங்களையும் யாங்கும் கற்பிக்க வேண்டும் என்று துணிவுடன் கூறினார். பக்கத்தில் இருந்த நேயர்களை நோக்கி, "நீங்கள் தமிழிலே முடியுமா?" என்று கேட்டால், நான் "ஹிந்தியிலே முடியுமா? என்று கேட்பேன்" என்று அறைகூவினார். அதிலிருந்து அவருடைய தமிழ்ப் பற்றும் தமிழ் ஆர்வமும் அறியப்படும். அவர்கள் இம்மாநாட்டுத் திறப்பாளராக அமைவது இக்காரணத்தாலும், கல்வி அமைச்சராக இருக்கின்ற காரணத்தாலும் மிகவும் பொருத்தமானதே.

---

*சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் 11-7-54ல் பேசியது.

நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் இந்தப் பல்கலைக் கழகத்திலேயே ஐந்து ஆண்டுகள் தமிழ்ப்புலமைத் தலைமை நடாத்திப் பெருந் தொண்டாற்றித் தமிழ்மொழிக்கென வாழ்ந்து வருபவர். இன்றும், வயது முதிர்ந்த நிலையினும் தமிழே தம் உயிர்ப் பொருள் என வாழ்ந்து வருகின்ற அவர்கள், அத்தமிழ் மொழிக்காக அருந் தொண்டாற்றி வருவது போற்றத்தக்கது ஒன்றாகும். அவர்கள் இன்று இம்மாநாட்டுக்குத் தலைமை தாங்குவதற்கு இசைந்ததற்காக அவர்களுக்கும் நன்றி சொல்லி அவர்களை வரவேற்கிறேன். அன்றியும், இந்த மாநாட்டிலே பங்கு பெறுவதற்காக எங்கள் அழைப்பிற்கு இணங்கி வந்திருக்கின்ற ஆசிரியர்கள் பலருக்கும் "நுங்கள் வரவு நல்வரவாருக" என மொழிகின்றேன். எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி இங்குக் கூடியிருக்கின்ற அனைவரையும் வரவேற்கும் பொறுப்பு என்னுடையது ஆகின்றது.

இம்மாநாட்டிலே சிறப்பாகத் தமிழாசிரியர்களுடைய நிலையையும் ஊதியத்தையும் உயர்த்துதற்கு வழி காணவேண்டும் என்பது பல மாவட்டக் கழகங்களின் செயற்குழுக்களுடைய விருப்பம். உயர்தரப் பள்ளிக்கூடங்களிலே பணியாற்றுகின்ற தமிழாசிரியர்கள் ஏனைய ஆசிரியர்களின் நிலை அளவாவது உயர்த்தப்படவேண்டும் என்பது அவர்களுடைய விழைவு. ஏனைய பொருள்களைப் பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்கள் வகுப்பு ஆசிரியர்களாகவும் தேர்வு மேற்பார்வையாளர்களாகவும் அமைதல் போலத் தமிழாசிரியர்களும் அமைய இடம் செய்து தருதல் வேண்டும் என்ற அவர்களுடைய வேண்டுகோள் அரசியல் அதிகாரிகளாலும், பள்ளிக்கூட நிர்வாகிகளாலும் கவனித்துச் செயலாற்றப்படும் தரத்ததாகும். தமிழ்மொழியினைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் தங்கள் பொருளிற் பிறரை ஒத்த சிறந்த தகுதி பெற்றிருக்கிறார்கள் ஆனதினாலே, பயிற்சி பெற்ற வித்துவான்களும் புலவர்களும் பி. ஏ., எல். டி. பட்டம் பெற்ற ஆசிரியர்கள் பெறும் ஊதியம் பெறுமாறு செய்ய வேண்டும் என விடுதலை இந்தியாவில் எதிர்பார்ப்பது பொருத்தமானதே. அவ்வண்ணம், அவர்களுடைய நிலையையும் சம்பளத்தையும் உயர்த்துவதற்குக் கேட்டுக் கொண்டு தீர்மானங்கள் சில நிறைவேற்றப்படவிருக்கின்றன.

இம்மாநாடு தமிழாசிரியர்களுடைய குறைகளைத் தெரிவிப்பதற்கு மாத்திரம் கூட்டப்படுவது ஒன்று அன்று. சென்னை மாநிலத்திலேயுள்ள தமிழாசிரியர்கள் பலர் ஒருவரோடு ஒருவர் கூடி அளவளாவுவதற்கும், தமிழைப் பற்றியும் தமிழாசிரியர்களைப்பற்றியும் தங்கள் தங்கள் கருத்துக்களை உரையாடிக்

கொள்வதற்கும் இம்மாநாடு பெரிதும் உதவும் என்பது நம்பிக்கை.

தமிழாசிரியர்கள் திருக்குறளை நன்றாகக் கற்று ஓதிப் பயிற்றுவித்து வருகிறார்கள். ஆனதால் அவர்கள் கடவுள் நம்பிக்கையும் கடவுட் பற்றும் உடையராக இருப்பர் என்பது சொல்லாமலே விளங்கும். திருவள்ளுவர் கூறிய "கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என்ற திருக்குறள் தமிழாசிரியருக்கு என்றும் உவகை அளிக்கும் ஒரு பொன்மொழி என்பதில் ஐயமில்லை. எனவே, கற்றுத தேர்ந்ததன் நோக்கங்களில் தலையாயதாய இறைவணக்கம் அவர்களுடைய உடம்போடும் உயிரோடும் ஒட்டியது ஒன்றாகும். அவ்வாறு இருப்பவும், எங்கேயாவது யாராவது ஒரு தமிழாசிரியர் கடவுள் நம்பிக்கை குறைவாக வுடையவராகவோ, கடவுள் நம்பிக்கை அற்றவராகவோ காணப்பட்டால், அது காரணமாகத் தமிழாசிரியர் அனைவரும் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் என்பதுபோல் கருதப்படுகின்ற கருத்து தக்கது அன்றாம். கடவுள் நம்பிக்கை இல்லாமல் வாழ்கின்ற ஆசிரியர்கள் ஏனைய துறைகளிலும்தான் காணப்படுகிறார்கள். ஆனால் பொதுவாக அவர்களைப்பற்றி எவரும் ஒன்றும் சொல்லிவிடாமல், தமிழாசிரியர் என்றவுடனேயே அவர் கடவுள் நம்பிக்கையின்கண்ணே ஐயுறுகிறார்கள். இதற்குச் சிறந்த காரணமாக இருக்கக் கூடியது தமிழாசிரியர்களின் தமிழ்ப்பற்றே ஆகும் போலும்! தமிழாசிரியர்கள் சிலர் தமிழ்மொழியிலேயே தமிழ் மக்களின் வாழ்க்கைச் செயல்முறைகள் அமைய வேண்டும் என விளம்புகிறார்கள்; நடத்தியும் காட்டுகிறார்கள். பிறந்த நாள் தொட்டு நடைபெறுகின்ற சடங்குகளிலும், திருமணங்களிலும் கடவுள் வழிபாட்டிலும், நீத்தார் வழிபாட்டிலும் தமிழ் மொழி இடம்பெற வேண்டும் என்பது பல தமிழாசிரியர்களின் ஒப்ப முடிந்த கருத்து. இக்கருத்து உடையோரைத் தவறுதலாகச் சில வேளைகளில் சிலர் கடவுட் பற்று உடையவர் அல்லர் எனக் கூறிவிடுகிறார்கள். அது பொருந்தாது. உதாரணமாக, இந்தப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டாற்றி வந்த திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்., அவர்கள் தமிழர் தம் செயல்கள் அனைத்தும் தமிழ் மொழியில் இருத்தல் வேண்டும் என விரும்பினவர். அதனால், தில்லை நடராசர் கோவிலுக்கு அவர் சென்றாலும், வடமொழி வாயிலாக அர்ச்சனை செய்து கொள்ள விருப்பம் இல்லாதவராகத்தான் கடைசிவரை வாழ்ந்து காட்டினார்கள். அதற்காக, அவரை நாத்திகர் என்று சொன்ன

வர்கள் கூட உண்டு. இதிலிருந்தே அறியப்படும், ஒருவருடைய தமிழ்ப்பற்று சில வேளைகளில் பிறழ உணரப்பட்டு, அது காரணமாக ஏச்சுரையும் பேச்சுரையும் நிகழ்த்துவிக்க இடமா கின்றது என்பது.

நம்முடைய சமயத் தலைவர்கள் அனைவரும் நமக்குக் கற்பித் திருப்பது ஒரு கடவுள் வழிபாடும் ஒருமையுணர்ச்சியும் ஆகும். அதனால் கண்டகண்ட கடவுளரை வணங்காமல் அவரவர் விருப் பத்திற்கு ஏற்ப அமைத்துக் கொண்டு, ஒருவர் வழிபடுவார் எனின், அவரைக் குற்றம் கூறும் அளவு நாம் செல்லுதல் கூடாது. உண்மையிலே, புறவேடம் கொள்ளாமலும் கோயில் செல்லாமலும் உள்ளத்திலேயும் வீட்டிலேயும் கடவுளை வழி பட்டு உய்யக்கூடிய பெருமையுடைய தமிழாசிரியர்கள் பலர் இருக்கிறார்கள்.

ஆனால், மாணவர்களுக்குக் கற்பிக்கின்ற வேளைகளில் மாணவர்களுடைய கடவுள் உணர்ச்சி குன்றுமலும், மாணவர்களுடைய கடவுள் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய வகையிலேயும் ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும் என்றால், அது ஒப்புக்கொள்ள வேண்டியதே. புறவேடம் கொள்ளாமலும உருவ வழிபாடு இல்லாமலும் சிறுவர்களுடைய மனம் ஒன்றன் கண்ணே பற்றுக் கொள்ளாமல் கண்டவிடத்தில் திரிந்து கடவுளைப் பற்றித் திட்டமானதொரு கொள்கையைப் பற்ற முடி யாமல போகும் என்ற கருத்தினாலே, மாணவர்களுக்கு உருவ வழிபாட்டின் அவசியத்தையும், சமய சின்னங்கள் அணிவதன் அவசியத்தையும் ஆசிரியர்கள் சொல்லக் கடமைப்பட்டவர்கள் என்றால், அதுவும் பொருத்தமானதே. அன்றியும், பள்ளிக் கூடங்களில் பாடமாக வைக்கப்படுகின்ற நூல்களில் வரும் கடவுள் வாழ்த்துச் செய்யுட்களை முதலானவற்றைக் கற்பிக்குங் கால், ஆராய்ச்சி செய்து இளைய மாணவர்களுடைய உள்ளங் களில் ஐய வினாக்களை ஆசிரியர்கள் எழுப்பி விட்டுவிடக் கூடாது என்று எதிர்பார்ப்பது பொருத்தமானதே இவ்வண்ணம் ஆசிரி யர்கள் செய்துவிடுதல் இல்லையென்றே நான் நம்புகிறேன்.

தமிழ் ஆசிரியருள் ஒருவனாகிய நான் என் நண்பர்களாகிய நீங்கள் நடந்துகொள்ள வேண்டிய விதம் பற்றி ஒரு சொல் சொன்னால் தவறுதலாகக் கருதமாட்டீர்கள் என்றே நம்பு கிறேன். நாம் பணியாற்றும் கல்லூரியிலாயினும், பள்ளிக் கூடத்திலாயினும் சட்ட திட்டங்கட்கு உட்பட்டு நாம் நடந்து மாணவர்களுக்கு முன் மாதிரியாக இருத்தல் வேண்டும். சில வேளைகளில் தேசிய கீதமாகிய 'ஜனகணமன' பாடவேண்டிய நிகழ்ச்சிகளும் இடங்களும் அமைகின்றன. அந்நேரங்களில்,

இந்தியில் நமக்கு விருப்பம் இருந்தாலும் இல்லாது போனாலும் அது தேசிய கீதம் ஆனதால், அது பாடப்படும்பொழுது நேர் நின்று, மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பது வற்புறுத்தத்தக்கது. அதனைப் பாடும்பொழுது கூட்டங்களில் இருந்து எழுந்து போய்விடுதல் என்பது ஒவ்வாது. இவ்வகையில் நாம் மாணவருக்கு வழிகாட்டியாய் இருத்தல் வேண்டும்.

இந்நேரத்தில் நான் இன்னொரு செய்தியையும் குறிப்பிட விரும்புகிறேன். நம் நாட்டிலே சில கல்லூரி மேடைகளிலேயும், உயர்தரப் பள்ளிக்கூட மேடைகளிலேயும் "வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்" என்ற பாரதியார் பாட்டினைப் பாடுதற்குப் பலர் ஏற்பாடு செய்கிறார்கள். அந்நேரங்களிலே அப்பாடலில் வருகின்ற "ஆரிய நாட்டினர் ஆண்மையோடு இயற்றும் சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக" என்று வருகின்ற காரணத்தால் அப்பாடலை அவ்வண்ணம் பாடுதற்கு உளம் தாழாமல் இருக்கின்ற தமிழ் ஆசிரியர்களும் மாணவர்களும் உண்டு என்பதை அறிவேன். இவ்வாறு மாணவரும் ஆசிரியரும் இருப்பாரேயாயின், அதுகாரணமாக அவர்களை நாத்திகர் என்றோ தேசத் துரோகிகள் எனறோ கூறிவிடுதல் பொருந்தாது. ஆரிய நாட்டினர் என்ற இந்தப் பாட்டிலே வருகின்ற பகுதி பாரத நாட்டினர் என்று பொருள்படும். அதனால் இந்தியா தேசத்தினர் செய்யும் முயற்சிகள் ஓங்குக என்று பொருள் கொள்ளக்கூடிய வகையில் பாட்டு அமைகின்றது என்று சிலர் சொல்லுதல் இயலும். ஆயினும், இந்தப் பாட்டினைப் பாடிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரே தமிழ்மொழியினை ஆரியத்தினின்று வேறுபடுத்தி ஆரியத்துக்குச் சமமாகத் தமிழ்த்தாய் வாழ்ந்தாள் என்றவாறு இன்னொரு பாடலில் கூறியுள்ள காரணத்தாலே ஆரியமொழி வேறு தமிழ்மொழி வேறு என்ற கருத்துடையவர் அவர் என்பது அறியப்படும். தமிழ்த்தாய் கூற்றாக அவர் அமைத்திருக்கின்ற ஒரு பாடலிலே, "ஆன்ற மொழிகளினுள்ளே—உயர் ஆரியத்துக்கு நிகர் என வாழ்ந்தேன்" என்று அமைத்துப் பாடியிருக்கின்றார். ஆனதால் வடமொழி வேறு தமிழ்மொழி வேறு என அவர் மதித்தார் என்பது அறியப்படும். இதனால், அறிவும் சாதுரியமும் வாய்ந்த கூட்ட அமைப்பாளர்கள் செய்யவேண்டிய பணி யாதெனின், "வாழிய செந்தமிழ்" என்ற பாட்டைப் பாட ஏற்பாடு செய்யும்பொழுது, "ஆரிய நாட்டினர்" முதலாவதாக வருகின்ற அடிகளை விடுத்துப் பாட ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதே. ஆயினும், இப்பாடலை உள்ளபடியே ஒரு மேடையிலே ஒருவர் பாடிவிட்டால், அந்தக் கூட்டத்தில்

உடனே குழப்பத்தை விளைத்துவிடாமல் தலைமை ஆசிரியரையோ கூட்ட அமைப்பாளரையோ பிறகு கண்டு அவ்வாறு இனிச் செய்யலாகாது என்று எடுத்துச்சொல்லி, அவ்வண்ணம் மேற்கொண்டு செய்யாமல் பாதுகாத்துக்கொள்வதே தமிழாசிரியர் பொறுப்பும் கடமையும் ஆகும். அன்றி, அப்பாட்டையே பாடுதற்கு ஏற்பாடு செய்யாமல், "வாழ்க நிரந்தரம்—வாழ்க தமிழ்மொழி—வாழிய வாழியவே" என்ற தொடக்கத்திலே பாரதியார் பாடியுள்ள தமிழ்மொழி வாழ்த்தினைப் பாட ஏற்பாடு செய்வது இன்னும் விரும்பத்தக்கதாகும்.

இவை என் உள்ளத்தில் தோன்றிய கருத்துக்கள். இவற்றைச் சிந்திக்குமாறு உங்களைக் கேட்டுக்கொண்டு, நீவிர் அனைவிரையும் அன்புடன் வரவேற்கிறேன். இம்மாநாடு வெற்றியுடன் நடைபெறுமாறு அருளும்படி இறைவனை வேண்டிக் கொண்டு உங்களுடைய ஒத்துழைப்பை நாடுகிறேன்.

செல்வியே வருக! வாழ்க!!

[வித்துவான், திரு. சி. இராமசாமி, வத்தலக்குண்டு]

இராகம் : சங்கராபரணம்] [தாளம் : ஆதி

தொடுப்பு

செல்வியே! வருகவே!—செந் தமிழ்ச்
செல்விநீ வாழ்கவே!

எடுப்பு

பல்வகை யானமணிப் பரல்கள் நிறை சிலம்பு
ஒல்லென ஒலிசெய ஒய்யார மாய்நடந்து (செல்)

முடிப்பு

இருபத்தெண் அகவைகள் இனிதே நிறைந்தாய்!
இருபத்தொன்பான் வயதை எய்துதற் கேவந்தாய்!
திருமுத்தமிழ் பரப்புந் திறமிகக் கொண்டாய்!
திகழுந் தென்னாட்டவரின் புகழ்பெரி துண்டாய்! (செல்)

தூயதனித் தமிழால் சொல்லினை இசைப்பாய்!
தொன்மைப் பனுவல்களின் தன்மையை விரிப்பாய்!
ஆயும் புலவர்களின் ஆற்றலில் வளர்ந்தாய்!
அன்புரைகள் வழங்கும் அன்னையை நிகர்த்தாய்! (செல்)

தெளிய வடித்தகொம்புத் தேனெனும் மொழியில்
தேர்ந்த பலகலைநூல் ஆய்ந்திவண் வழங்கும்
களிதரு சைவசித் தாந்த நூற்பதிப்புக்
கழகத்திலே பயின்று காண்பதற் கினிதாய்ச் (செல்)

தலைமைப் பேருரை*

[தொகுத்தோர் திரு. பழம் நீ]

என்னை இந்த ஆசிரியர் மாநாட்டுக்கு வந்து அழைத்த போது என் இயலாமையைக் கூறி மன்னிக்கும்படி கேட்டுப் பார்த்தேன். என்னுடைய குறைபாடுகளைச் சொல்லுவதற்காக வாவது இந்த மாநாட்டிலே என்னை அழைத்தார்களோ? எப்படி இருந்தாலும் நாம் சொல்லும் கருத்துக்களையோ என்னையோ மறுத்துக்கூற உங்களுக்கு உரிமை இல்லை! என்று முதலிலேயே சொல்லிக் கொள்ளுகிறேன்.

வாழ்க்கையிலே ஒரு மொழியைப்பற்றி மட்டுமே தெரிந்து கொண்டால் போதாது. வாழ்க்கையில் ஒரு மொழியைமட்டும் படித்துப் பயன்படுத்திவிடலாம் என்று எண்ணுவது தவறு. ஒவ்வொரு மொழிகளிலும் சிறந்த துறைகள் உண்டு. மொழிகள் எல்லாம் சிலசில துறைகளிலே மேம்பட்டிருக்கலாம். ஒரு மொழி மற்றொரு மொழிக்குத் தாழ்ந்ததல்ல.

அக்காலத் தமிழகம், பாரதியாரைத் தமிழனாகக் கருத வில்லை! தமிழனைத் தமிழன் போற்றியதில்லை! பாரதியார் கௌபீனம் கட்டிய நாள் முதல் பட்டினியோடு அவர் புதுவை யிலேயே காலம் கழித்ததை நான் அறிவேன். முதலிலே என்னைச் சந்தித்ததும் கட்டித் தழுவினார். நான் எழுதிய கட்டுரைகளையெல்லாம் படித்துப் பாராட்டினார். தமிழர்கள் தமிழர்களை மதிப்பதில்லை! தமிழர்களே தமிழர்களை மதிக்கவில்லை யென்றால் பார்ப்பனர் தமிழர்களை ஏன் மதிக்கப்போகிறார்கள்?

புலமையைப் புலமைக்காகப் படிக்கவேண்டும். பாராமல் ஒப்பிப்பது படிப்பல்ல. அறிவு என்ற நிலையிலே மொழியைப் பற்றிக் கவலையில்லை. அறிவை வளர்க்கக்கூடியது எதுவோ அது தான் கல்வி. தமிழ் வளரவேண்டுமானால் முதலிலே அறிவு வளர வேண்டும்.

ஆசிரியர் என்று வருகிறவர் என்ன மொழியினாலே சொன்னாலும் அறிவை அடிப்படையாகக் கொண்டு சொல்ல வேண்டும். ஆசிரியர்களும், மக்களும் சிந்திக்க வேண்டும்.

---

* அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்புவிழாமண்டபத்தில் 11-7-'54 அன்று நடைபெற்ற சென்னை மாநிலத் தமிழாசிரியர்கள் மாநாட்டில் நாவலர் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள் ஆற்றிய **தலைமைப் பேருரை.**

சாதாரணமாகச் சில பழைய பாட்டுக்களை தமிழர்கள் பலர் நெஞ்சுருத்தி ஒப்பிப்பதைப் பார்க்கிறேன். பலாபலன்களைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

தமிழையே அகத்தியர் உண்டுபண்ணினரா? இல்லையா? என்ற ஐயப்பாடு உங்களில் பலர்க்கு இருக்கிறது. எந்த ஆதரவு வைத்துக்கொண்டு அகத்தியர் தமிழை உண்டாக்கினர் என்று சொல்லுகிறீர்கள்? அகத்தியர் தமிழை வளர்த்தார் என்று கூறுவது முழுப்பொய். தமிழைப் படித்ததால் அகத்தியன் பெருமை பெற்றன்; கம்பனைச் சும்பனுக எல்லோரும் எண்ண வில்லை! கம்பன் சொல்லுகிருன், தமிழைக்கூடக் கடவுள் ஆக்க வில்லை. வடமொழியையும் கடவுள் ஆக்கவில்லை. தேவ மொழி என்று கூறி ஒரு கூட்டத்தார் புகுத்தினர்கள். பேச்சு வழக்கில் வடமொழி இருந்ததில்லை! இருக்கப்போவதுமில்லை. அதை மக்கள் ஒரு சில காரியங்களுக்காக வளர்த்தார்கள்; காளி தாசன்கூடப் பேச்சிலே வடமொழி இருந்ததாகச் சொல்ல வில்லை!

இலத்தீன் மொழி ஐரோப்பாவிலே சிறந்த மொழியாகக் கருதப்பட்டது. ஐரோப்பாவிலே இருந்த அறிஞர்களில் பலர் இலத்தீன் மொழியைப் படித்தவர்கள். இலத்தீன் மொழியும் பேச்சு வழக்கில் இல்லாத மொழி, இலத்தீன் மொழியைவிட நூறு மடங்கு சிறந்ததாக வடமொழி செய்யப்பட்டது. கம்பர் கூட அகத்தியனைப் பற்றிக் கூறும்போது,

"என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்டான்"

என்று கூறியுள்ளார்.

அகத்தியன் கடவுள் அல்ல; அகத்தியன் ஒரு மனிதன்; அகத்தியனைப்பற்றிப் புராணங்கள் கட்டுக்கதைகளைக் கிளப்பின; கடலால் அழிந்தொழிந்த பகுதிகள் சில, பண்டைத் தமிழ்நாடு என்று அழைக்கப்படுகிறது. புதிதாகத் தமிழ்மொழி பிறக்க வில்லை. ஆரியம் பற்றித் தவறுன கருத்து தமிழ் நாட்டில் நிலவு கிறது. ஆரியம் என்ற சொல்லைப் பழிப்பதே பிசகு.

வடமொழியைச் சனியனுக ஏன் கருதுகிறீர்கள்? வட மொழியைக் கண்டு அஞ்சத்தகுந்த நிலை ஏற்படுவானேன்? வடமொழியால் தமிழை எக்காலத்திலும் அழித்துவிட முடியாது; அழிப்பதே என்று திட்டம் போட்டுக்கொண்டு சிவ பெருமானே வந்தாலும் தமிழ் அழியாது.

தமிழ் ஆதிகூட இல்லாதது; அந்தமும் இல்லாதது; கம்பன் சொல்லிய கருத்தைப் புலவர் பெருமக்கள் சிந்தித்துப்

பார்க்கவேண்டும்; சிந்திக்காமல் விரைவு விரைவாக இக்காலப் புலவர்கள் பலர், கருத்தை வெளியிடுவது தவறு; எந்தக் கருத்தைச் சொல்லுவதானாலும் சிந்தித்து ஆராய்ந்து பேசுங்கள்.

கேள்விப்பட்டதை யெல்லாம் ஆராயாமல் மேடையிலே தெரிவிக்கிறீர்கள். தமிழ்ப் புலவர்களே தமிழைப் பற்றி ஆராயாமல் கருத்தைத் தெரிவித்தால் (Physics, Chemistry) படித்த ஆசிரியர்கள் தமிழைப் பற்றி என்ன என்ன எண்ணுவார்கள்?

தன் மதிப்பு இருக்க வேண்டும்; நீங்களே தமிழை முதலிலே மதிக்க வேண்டும்; தமிழை நீங்கள் நன்கு மதித்தால் தான் தமிழுக்கும் உங்களுக்கும் பெருமை. தமிழே தமிழரின் செல்வம் என்பதை நினைவில் வையுங்கள்.

"மானம்" என்ற சொல் எந்த மொழியிலும் கிடையாது. இந்தச் சொல்லிலே இருக்கிற சிறப்பை எண்ணிப் பாருங்கள்; தமிழாசிரியர்கள் உண்மையைத் தேடி அலையவேண்டும்; தமிழின் பழமையை மட்டும் பேசினால் - தமிழ் உயர்ந்து விடுமா? தமிழ்மொழி பழமை வாய்ந்தது என்று சொன்னால் தமிழ் மொழி வளர்ந்துவிடுமா?

இலக்கணம் என்றால் இலக்கணம், பாட்டு என்றால் பாட்டு, ஆனால் செய்யுள் என்றால் பாட்டல்ல. செய்யுள் என்றால் (Literature) இலக்கியம், இலக்கியத்துக்குப் பொதுப்பெயர் செய்யுள் என்பது. செய்யுள் என்ற சொல்தான் தமிழ். இலக்கியம் என்ற சொல் தமிழல்ல; அது வடமொழி.

அறிவை முன்னிருத்தி எதையும் செய்யுங்கள். மேலும் மேலும் அறிவை வளர்த்துக்கொண்டே போகவேண்டும். அறிவுத் துறையிலே நின்று ஆராய்ச்சி செய்தால் புதிய துறையிலே தமிழும் தமிழர்களும் முன்னேறலாம். உலகமொழிகளிலே சிறந்தது, தமிழ்மொழி.

ஆங்கிலம், பிரெஞ்சு மொழியைவிடத் தமிழுக்குக் குறை இருந்து வருகிறது. தமிழாசிரியர்கள் தமிழை இறந்துவிடும்படி விட்டுவிடலாகாது; தமிழை எல்லோருக்கும் பயன்படும்படி செய்ய வேண்டும்; தமிழை ஒரு துறையிலே மட்டும் வளர்க்காமல் பல துறையிலும் வளர்க்க வேண்டுமென்று அமைச்சர் சொன்ன கருத்தை வரவேற்கிறேன்.

இந்தப் பல்கலைக் கழகம் என்ன நோக்கத்துக்காக ஏற்பட்டது? தமிழ் மக்களுக்காக, தமிழுக்காக ஏற்பட்டது,

இந்தப் பல்கலைக் கழகம், தமிழுக்கு ஒரு சிறந்த தலைமையிடம். இதில் இருக்கிறது. இது நல்ல நோக்கத்தோடு கட்டப்பட்டது. வருங்காலத்தில் தமிழே கூடாது; தமிழுக்காகப் பல்கலைக் கழகம் ஏன்? என்ற காலம் வந்தாலும் வரலாம். அந்தக்காலம் வராமல் இருக்கும்படி செய்ய வேண்டிய பொறுப்பு, தமிழாசிரியர்களைச் சார்ந்தது.

தமிழாசிரியர்கள் நெஞ்சுகுத்திப் பாடல்களை மனப்பாடம் செய்தால்மட்டும் போதாது. எல்லாத் துறையிலும் தமிழாசிரியர்கள் அறிவைச் செலுத்திப் படிக்கவேண்டும். பல்கலைக் கழகம் என்றால் எல்லாத் துறையிலும் அறிவை வளர்ப்பது என்று பொருள். எல்லாம் என்றால் நல்லதெல்லாம் என்று பொருள். தமிழ் இளைஞர்கள் மற்ற எந்த நாட்டு இளைஞர்களையும்விட ஒருபடி முன்னேறவேண்டும் என்ற தனித்த எண்ணமுடையவன் நான். தமிழாசிரியர்களும் மற்ற ஆசிரியர்களைவிட ஒருபடி முன்னே இருக்கவேண்டுமென்பது என் ஆசை.

கல்வி அமைச்சர் பேசியதைக் கேட்டேன். கல்வி அமைச்சர் இவ்வளவு தூரம் கடவுள் உண்மையை வற்புறுத்தும்படி வந்து விட்டதே? கடவுள் உண்டா? இல்லையா? கடவுள் என்ற சொல்லிலே இருக்கிற அமைதியைப் பாருங்கள். தமிழன் தெய்வத்தை வழிபட்ட முறையே ஒரு சிறந்த முறை. இக் காலத்தில் பலர் கடவுளுக்கு ஒரு தலையா? ஆறு தலையா? கடவுளுக்கு ஒரு பெண்டாட்டியா? ஆறு பெண்டாட்டியா? என்றெல்லாம் கேட்கிறார்கள். இப்படிக் கேட்பது தவறு. கடவுள் என்றால் உள்ளம் கடந்தது என்பது பொருள். கடவுள் வழிபாடு ஒழுக்கத்தைப் பொறுத்து இருக்கிறது. ஒழுக்கத் துக்கு மாறாக நடப்பவனிடம் கடவுள் வழிபாடு இருப்பதாகச் சொல்லமுடியாது.

கி. பி. மூன்றும் நூற்றாண்டு முதல், பதின்மூன்றும் நூற்றாண்டுவரை, கலி முதலிய பாட்டுக்கள் இருந்தன. பின் பத்தாம் நூற்றாண்டில் தாழிசை, விருத்தம் முதலிய பலவினங்களில் காலநிலைக்கேற்ப இசைவகையில் ஈடுபட்டனர்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே."

என்றவனும் தமிழனே. பலவினங்களிலே இப்பொழுது பலர் பாடிவருகிறார்கள். தமிழாசிரியர்கள் பாவினங்கள் பல இயற்றுவதோடு நில்லாமல் அறிவுநூல்கள் பல இயற்றவேண்டும்.

தமிழாசிரியர்கள் நல்ல தமிழ்ச் சொல்லையே பயன்படுத்த வேண்டும். நல்லநெறி என்று சொல்லுங்கள்; சமயம் என்று ஏன் சொல்லவேண்டும்? 'சிவநெறி' என்று சொல்வதற்குப் பதிலாக 'சைவசித்தாந்தம்' என்று ஏன் சொல்லவேண்டும்?

அன்பர்களே, நல்ல துறையிலே அறிவாராய்ச்சி செய்யலாம். தமிழாசிரியர்களிடையே அறிவு வளரவேண்டும். அறிவு வளர்ந்தால் நாடும் முன்னேறும்; நாமும் முன்னேறுவோம். தமிழாசிரியர்கள் அனைவரும் அறிவுத்துறையிலே ஒன்றுபட்டு உழைத்தால்தான் நாம் வெற்றிபெறலாம். அறிவுத்துறையிலே பெரியவர் என்று சொல்லப்படுகிற பெருந்திருவாளர் சவகர்லால் நேரு, எல்லாக் கருத்துக்களையும் தாய்மொழியிலேயே வெளியிடவேண்டுமென்று சொன்னார்.

ஆங்கிலம் மிகுதியாகப் படித்த எனக்கு இளமையில் தமிழார்வம் உண்டானது. வழக்கறிஞர் தொழிலிலே மிக்க வருவாய் வந்தபொழுதும் அதை விட்டுவிட்டுத் தமிழைப்படிக்க எண்ணினேன். தமிழ், படிக்கும்படியான ஆற்றலை எனக்கு ஊட்டியது; மொழியின் ஆற்றலைக்கண்டு நான் வியந்தேன். தமிழிலே சிறிது சுவையும், அன்பும் தோன்றிவிட்டால் தமிழ் அவர்களை எந்நாளும் விடாது. இந்த மாநாட்டிலே கலந்து கொண்டதைக் கண்டு வீறுப்படைகிறேன்.

தமிழ்மொழி இன்றோ அல்லது நேற்றோ தோன்றியதல்ல. தமிழ் பழமைவாய்ந்த மொழி. மனிதர்கள் முதலில் பேசுவதற்கு முன்பே தமிழ் தோன்றியது. தமிழ் என்ற சொல்லின் அழகை எண்ணிப்பாருங்கள். எல்லா உலகமும் போற்றக் கூடிய திருக்குறள் நம்முடைய தமிழ்மொழியிலே தோன்றியது நமக்கெல்லாம் எவ்வளவு பெருமையைத் தந்திருக்கிறது.

"பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"

என்று மணிமேகலை கூறுகிறது. திருவள்ளுவருக்கு மற்றப் பெயரைவிடப் 'பொய்யில் புலவன்' என்பது மிகவும் பொருந்தும். வள்ளுவன் சாதிப்பெயரல்ல; தொழிற்பெயர்; சாதி என்ற சொல்லே திருக்குறளில் இல்லை!

தமிழாசிரியர்கள் தமிழ்க்கலையை வளர்ப்பதோடு மட்டும் நில்லாமல் எல்லாக் கலையையும் வளர்க்கப் பாடுபடவேண்டும். தமிழாசிரியர்கள் அனைவரும் இனியாவது ஒன்றுபட்டு நாட்டுக்கும், மொழிக்கும், மக்களுக்கும் தொண்டாற்றவேண்டும் என்று சொல்லி என் உரையை இந்த அளவோடு நிறுத்திக் கொள்ளுகிறேன்.

பெருங்காப்பியமும் தொடர்நிலையும்

[திரு. நா. பார்த்தசாரதி]

பிற்காலத் தணியிலக்கணஞ் செய்த ஒருசாராசிரியர் கவியான் யாக்கப்படுவனவற்றுள் பொருட்டொடர் நிலையைக் காவியமெனப் பெயர் நிறீஇத் தனிவகுத்துப் பெருங்காப்பியம் சிறுகாப்பியமென இருவகைப் பாகுபாடுஞ் செய்தனர்.

> "பெருங் காப்பியமே காப்பிய மென்றாங்
> கிரண்டா யியலும் பொருட் டொடர்நிலையே" (தண்டி : எ)

அவற்றுள்,

> "பெருங் காப்பியநிலை பேசுங் காலை
> வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினொன்
> றேற்புடைத் தாகி முன்வர வியன்று
> நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்
> தன்னிகரில்லாத் தலைவனை யுடைத்தாய்
> மலைகடல் நாடு வளநகர் பருவ
> மிருசுடர்த் தோற்றமென் றினையன புனைந்து
> நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
> பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
> தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
> புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்
> றின்னன புனைந்த நன்னடைத் தாகி
> மந்திரந் தூது செலவிகல் வென்றி
> சந்தியிற் றொடர்ந்து சருக்க மிலம்பகம்
> பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி,
> நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
> கற்றோர் புனையும் பெற்றிய தென்ப" (தண்டி : அ)

என்று தண்டியாசிரியர் கூறிய பெருங்காப்பிய இலக்கணத்தையும்,

> "அறமுதல் நான்கினுங் குறைபா டுடையது
> காப்பிய மென்று கருதப் படுமே" (தண்டி : க0)

என்ற சிறுகாப்பிய இலக்கணத்தையும், ஒருபுடையான் ஒத்திருந்தமை நோக்கி முந்துநூல்களாகிய சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை என்னுந் தொடர்நிலைச் செய்யுட்களைக்

காப்பியமென மயங்கினர் ஒரு பகுதியார். அதனாலேயன்றோ இவையிற்றை, "ஐம்பெருங் காப்பியம்" என்றுங் குறியிட்டு வழங்குவாராயினர். பொருட் டொடர்நிலையெனக் குறியீடு நோக்க வேறுபாடு தெற்றென விளங்காதாயினும், அத்தொடர் நிலைச் செய்யுட்களைக் கருத்தொடு நுணுகி ஆராயப்புக்கால் பெருங்காப்பியத்தின் அமைப்போடு இதனிடையுள்ள வேறு பாடுகள் மலையிடை மடுவிறுக்குள்ளதுபோல அமையும். தண்டி யாசிரியர் கூறியவாறு பிற்காலத்துப் பெருங்காப்பியங்கள் மலை வருணனை, கடல் வருணனை, நாட்டு வருணனை முதலியவற்றைப் பரக்க அமையும்படியும் பிற உறுப்புக்களும் ஒன்று தவறாமல் அமையும்படியும் செய்திருப்பச் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியன அவ்வுறுப்புக்களையோ, பிறவற்றையோ தனியாக முன்நிறுவியும் விதந்தெடுத்தும் கூறுமை ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. சிந்தாமணி நாட்டுவருணனை, நகர் வளம் முதலியன கூறிற்றேனும் பின்னையோர் காப்பியங்கள் போலாது காவியநாயகன் சீவகன் தோற்றத்தைக் கூறவேண்டினர் அதன் முன் அவற்குத் தந்தை தாய் இவர்களது வரலாற்றைக் கூறு தற்கு முன்னியைபு நோக்கி நாடு நகரங்களைச் சிலவாகிய பாக் களால் புனைந்துரைத்தார். பின்னூல்களுள் இவ்வருணனைகளைத் தனித்தனித் திறங்களாக விரித்துச் செய்திருப்பக் கதைப்பகுதி மிக்குவர இவ்வருணனைப்பகுதி இயைபுபற்றிச் சிற்றளவே வர 'நாமகளிலம்பகத்தை'த் தேவர் அமைத்துள்ளமையும் நோக்கத் தக்கது. அன்றியும் சிந்தாமணியொழியப் பிறவிரண்டும் நான்கு உறுதிப்பொருள்களையும் முற்றக் கூறியனவில்லை. மணிமேகலை வீடொன்றுமே பரக்கக் கூறிற்று. சிலப்பதிகாரம் இன்பங் குறைய அறம் பொருள் என்னும் இரண்டுறுதிப் பொருள் களுமே பெருக அமைந்துள்ளது. அங்ஙனமிருக்கவும் இவற் றைப் பெருங்காப்பியமென நம்மவர் பெயர் கொடுத்து வழங் குவது பொருந்துவதாகுமோ? அடியார்க்குநல்லார் சிலப்பதி காரத்தையும் மணிமேகலையையும் ஒன்றாக எண்ணி இரண்டுங் கற்றபின் நாற்பொருள் பயக்குமென்று கொண்டு சிலப்பதி காரத்தைப் பெருங்காப்பியமாகக் கூறினமையும், தண்டியாசிரி யர்க்குப் பிற்காலத்துத் தத்தம் இலக்கண நூல்களுள் அணி யிலக்கணங் கூறப்புகுந்த வீரசோழியம், இலக்கண விளக்கம் இவைகளின் ஆசிரியர்கள் அம்முறையே பெருங்காப்பிய இலக் கணங் கூறுதல் பற்றியும் இவைகளை ஒருதொகுதிப்படுத்தி 'ஐம்பெருங் காப்பியம்' என்பாராயினர். அடியார்க்குநல்லார் கூற்றுப்படி சிலப்பதிகாரமும் மணிமேகலையும் வெவ்வேறாசிரி யர்களால் இயற்றப்பட்டனவாயினும் இரண்டுங் கற்க நாற் பொருள் பயக்குமாயினும், 'ஐம்பெருங் காப்பியம்' எனத்

தொகைதந்தது பொருந்தாது. வளையாபதி, குண்டலகேசி, சிந்தாமணி என்னும் ஏனைய மூன்றோடு இவையிரண்டையும் ஒன்றாக்கிக் கூட்டி 'நாற்பெருங் காப்பியம்' எனல் வேண்டும். சிந்தாமணியில் நச்சினார்க்கினியரும் செய்யுளியலுரையிற் பேரா சிரியருங் கூறிய விளக்கங்களால், பெருங்காப்பியம் வேறு, தொல்காப்பியர் வனப்பியல் வகையாற் கூறும் தொடர்நிலைச் செய்யுள் வேறு என்பது புலப்படும். 'ஒருகதையைப் பொருட் டொடர்படக் கூறுவன' என்ற புற நோக்கால் பெருங்காப்பி யமும் தொடர்நிலைச் செய்யுளும் ஒக்குமாயினும், உட்பகுதி பல வும் இரண்டிற்கும் ஒவ்வாமை விளக்கப்படும்.

"தொன்மைதானே
உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே"
(தொல்: செய்யு: உ௩ எ)

என்னுந் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரவுரையில் "தொன் மையென்பது உரைவிராய்ப் பழைமையவாகிய கதைப்பொரு ளாகச் செய்யப்படுவது, அவை பெருந்தேவனாராற் பாடப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன" என்றார், பேராசி ரியர். நச்சினார்க்கினியரும் இவ்வாறே யுரைத்துச் சிலப்பதி காரத்தையும் இதன்பாற்படுத்தினார். அங்ஙனம் சிலப்பதி காரத்தை இதிலடக்கிய நச்சினார்க் கினியர், மணிமேகலை சிலப் பதிகாரத்தின் தொடரேயாகி அடங்கும் என்று கருதிச் சிலப் பதிகாரத்தை மட்டும் இதிலடக்கினாரோ? அன்றிச் சிலப்பதி காரத்தை மட்டும் தனியாகக் கூறினாரோ? அறிகிலம். இனிச் சிந்தாமணித் தொடக்கவுரையில், "மெல்லென்ற சொல்லான் அறம்பொருளின்பம் வீடென்னும் விழுமியபொருள் பயப்பப் பழையதொரு கதை மேற் கொச்சகத்தாற்கூறின், அது தோல் என்று கூறினமையின் இச்செய்யுள் அங்ஙனங் கூறிய தோலா மென்றுணர்க" என்றும், "மூந்துநூல்களிற் காப்பியம் என்னும் வடமொழியாற் றொடர்நிலைச் செய்யுட்குப் பெயரின்மையும் இதற்குப் பின்பு கூறிய நூல்கள் இதற்கு விதியின்மையு முணர்க" என்றும் கூறினார் நச்சினார்க்கினியர். இதே கருத்தைத் தொல் காப்பியச் செய்யுளியலுரையில், "அஃதிருவகைப்படும் கொச்ச கக்கலியானும் ஆசிரியத்தானுஞ் செய்யப்படுவன" என்றும், "பரந்தமொழியான் அடிநிமிர்ந்தொழுகினும் ஆசிரியப் பாட்டால் ஒருகதைமேற் றொடுக்கப்படினும் அவையும் பொருட்டொடர் நிலைத் தோலென்று சொல்லுவர் புலவர்" என்றும் கூறினார் பேராசிரியர். இன்னும் 'இயைபு' என்னும் வனப்புக்கு இலக் கணம் கூறும் சூத்திர உரையில், மணிமேகலையும் பெருங்கதையும் தொடர்நிலைச் செய்யுளாகவே பேராசியரால் எடுத்துக் காட்டப் படுகின்றன. அன்றியும்,

'சிலப்பதிகார மென்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்'
(சிலப்பதிகாரப்பதிகம் : ௫௯-௬0)

'உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசா லடிகள் அருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்' (பதிகம்: அ௭-அ௯)

எனவரும் அடிகளை நோக்குங்காலும் அவை தோலென்னும் வனப்பியல் வகை பெற்றுக், கொச்சகக்கலியானும் ஆசிரியத் தானும், தனி ஆசிரியத்தானும் பழையதாகியதொரு கதை மேல் நிகழ்ந்த தொடர் நிலைச்செய்யுள் என்பதே சாலப் பொருந் தும். இன்னோரன்னவற்றை நோக்காராகி "உலகத்துக் காப் பியஞ் செய்வோன் அறனும் பொருளும் இன்பமும் வீடுங்கூறல் வேண்டுமன்றே; இந்நாடகக் காப்பியத்துள், அறனும் பொருளும் இன்பமும் சிறிதாயினுங் கூறி வீடு கூறிற்றிலர்; என்னையெனின், யானறிகுவனது பட்ட தென்றுரைத்த சாத்தனார் நாற்பொரு ளும் பயப்பப் பெருங்காப்பியமாகச் செய்யக் கருதியிருக்கின் றார்க்கு அடிகள் "நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" என உளப்பாட்டுத் தன்மையாற் கூற" என்றும் "மணிமேகலை துறந்தாளென்பதுணர்ந்து அத்துறவினைப் பின்வைத்து அதனோடு நாற்பொருளும் பூரித்துப் பெருங்காப்பியமாக முடித்தலைக்கருதி அடிகள் சாத்தனார்க்கு இவ்வுரையை யுரைத்துழி, அவர் மணி மேகலை பெயரான் அவள் துறவே துறவாக அறனும் வீடும் பயப்ப ஒரு காப்பியஞ் செய்தமைத்தனரெனக் கேட்டு, அவ்வடி கள், விரும்பி இவ்விரண்டினையும் ஒருகாப்பியமாக்கி உலகின் கண்ணே நடத்துவான் வேண்டவும் இருவர் செய்தலின் இரண் டாக நடந்தன வென்க" என்றும் பதிகவுரையிற் கூறினார், அடி யார்க்கு நல்லார். இனி இளங்கோவடிகள் நூலிறுதிக் கட்டுரை யினுள்ளே,

"மணிமேகலை மேலுரைப்பொருள் முற்றிய
சிலப்பதிகார முற்றும்" (சிலப்பதிகாரம் : நூற்கட்டுரை)

என்றமையின் மணிமேகலையை மேற்றொடராகத் தாமே கூறக் கருதியிருந்தாரென்றுதல், அல்லது சாத்தனார் கூற அமையும் என்று கருதி விடுத்தாரென்றுதல் முடிவு செய்யவேண்டும். இல்லாக்கால் எவ்வாற்றானும் பிறர்கூறுமாறு பெருங்காப்பிய மாக முடியாது. இரண்டும் சேர்ந்து தனித்தனிச் சிறுகாப் பியங்களாக இயங்குவன என்பாராயின், ஐம்பெருங் காப்பிய மென்றது பொய்ப் பெயராம். அடியார்க்கு நல்லார் கருத்து இரண்டும் ஒன்றாயியைந்து பெருங்காப்பியமா மென்பதாகும். இரண்டு மொன்றாய் இயையுமென்னுங் கருத்துடையா ரோடு

நாம் சிறிதும் முரணவேண்டிய அவசியமில்லை. பெருங்காப்பியமா? தொடர் நிலைச் செய்யுளா? என்பதுதான் ஈண்டைக்கு வேண்டும் வினா. பிற்காலத்துப் பெருங்காப்பியமாயின் விருத்தம் முதலிய இனங்களாலும் வருவதற்குப் பெருங்காப்பிய இலக்கணம் தடைசெய்யாது. சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய இரண்டும் தோலுறுப்புக்குக் கூறிய பாக்களின் வரையறை விலகாமல் வந்திருப்பதும் கவனித்திடத்தக்கது. 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்' எனபதை உளப்பாட்டுத் தன்மையாகக் கொண்டார் அடியார்க்கு நல்லார். அதன் காரணமாகவே அவர் இரண்டும் ஒன்று இரண்டா என்ற கருத்தை எழுப்பிவைத்தனர். தற்செயலாகச் சாத்தனார் மணிமேலையையும், அடிகள சிலப்பதிகாரத்தையும் வேறுவேறாகத் தாந்தாம் இயற்றினர் எனபதிறைற் படும் இழுக்கின்மையான் இனைய ஐயங்கள், பயனற்றவைகளாம். 'விழுமியது நுவலினும்' என்றார்க்கு அறமுதறபொருள் நான்குங் குறைவின்றி நிறைதல் வேண்டும் என்பது கருத்தா? ஒன்றிரண்டு குறைந்தும் வரப்பெறலாம் என்பது கருத்தா? என்பதை முடிவு'காணவேண்டும். முன்னது கருத்தேல் ஐம்பெருங்காப்பியமென அறியாது குறியிட்ட பிற்காலத்தார் கருத்தோடன்றி, 'ஐம்பெருந் தொடர்நிலைச் செய்யுள்' என்று, தொடர்நிலைச் செய்யுளாகவே கூறினும் ஐந்தென்னும் தொகையான் வழுவாம். பின்னது கருத்தாயின் இக்காலத்தோர் மயங்கிப் பெயரிடற்கு அது ஒருகாரணமாதலோடு ஐம்பெருந் தொடர்நிலைச் செய்யுளெனல் தகும். இன்ன பல கருத்துக்கள் இன்னும் விரிவாக ஆராயத்தக்கன. இவையாவுமன்றித் தொடர்நிலைச் செய்யுட்கும் காப்பியத்திற்கும் இடை தெரிவின்றிக் "கவியான் யாக்கபபடுவன வெல்லாம் காப்பியம்" என்னும் பொதுக் கருத்தால் பிற்காலத்தார் இவைகட்கு ஐம்பெருங்காப்பியம்" எனக் குறியிட்டார் எனினும், காப்பியத்தோடு பெரிதும் ஒப்புமை கருதிக் குறியிட்டார் எனினும் அவைபற்றி ஆய்தல் பயனின்றுயொழியும். பெருங்கதை முதலியவம் தோலுறுப்பால் வந்த வனப்பியற் றொடர்நிலை என்று பேராசிரியர் கருதினரேல், அதற்குக் காலத்தால் முற்பட்ட இவை காப்பியமாதல் சிறிதளவும் பொருந்தா முடிபே என்பது பெறப்படும். எனவே, ஆசிரியர் தொல்காப்பியர் வனப்பியல் வகையால் விரித்துக் கூறிய தொடர்நிலைச் செய்யுள் வேறு, பிற்காலத் தலங்கார நூலார் இலக்கணம் வகுத்த காப்பியம் வேறு என்பதும், ஐம்பெருங்காப்பியங்களென இக்காலத்துப் போந்த குறியீடு, அவைகட்குப் பொருந்தாமையும், அவை தோலுறுப்புப் பெற்று வந்த தொடர்நிலையாகலும் இனிது விளங்கும்.

மறைவுற்ற தமிழ் நூல்கள்

[மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி]

(சிலம்பு: உஅ, பரல்: கஉ, ருஅஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

85. பாடலனார் இயற்றிய படலம்

பாடலனார் என்பவர் ஒரு இலக்கண நூலை இயற்றினார் என்பது, யாப்பருங்கல விருத்தியினால் தெரிகிறது. யாப்பருங் கலம், ஒழிபியலில் விருத்தியுரைகாரர் இந்நூல் சூத்திரம் ஒன்றை மேற்கோள் காட்டுகிறார். அது :

"முப்பத்திரண்டு தந்திர யுத்தியாவன :

"நுதலிப் புகுதலோத்து முறைவைத்தல்
தொகுத்துக் காட்டல் வகுத்துக் காட்டல்
முடிவிடங் கூறல் முடித்துக் காட்டல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோட் கூறல்
சொற்பொருள் விரித்த லிரட்டுற மொழிதல்
ஏதுவின் முடித்த லெடுத்த மொழியின்
எய்த வைத்த லின்ன தல்ல
திதுவென மொழிதல் தன்னின முடித்தல்
எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்
மாட்டெறிந் தொழுல் பிறநூன் முடிந்தது
தானுடம் படுத றன்குறி வழக்க
மிகவெடுத் துரைத்த லிறந்தது விலக்கல்
எதிரது போற்றன் முன்மேற் கோடல்
பின்னது நிறுத்த லெடுத்துக் காட்டல்
முடிந்தது முடித்தல் சொல்லின் முடிவின்
அப்பொருள் முடித்த றொடர்ச்சொற் புணர்த்தல்
யாப்புறுத் தமைத்த லுரைத்து மென்றல்
விகற்பத்து முடித்த றெருகுத்துடன் முடித்தல்
ஒருதலை துணித லுய்த்துணர வைத்தல்"

என விவை பாடலனாருரை."

இந்நூலைப் பற்றியும் இதை இயற்றிய பாடலனாரைப் பற்றியும் வேறு செய்திகள் தெரியவில்லை.

86. வங்கர் கோவை

வங்கர் கோவை என்னும் இந்நூலைக் களவியற் காரிகை உரையாசிரியர் தமது உரையில் கூறுகிருர். இது வங்கர் என்பவர் மீது அகப்பொருள் துறையமையப் பாடப்பட்ட கோவைப் பிரபந்தம். வங்கர் என்பவர் யார் என்பது தெரியவில்லை. களவியற் காரிகைப் பதிப்பாசிரியர் வங்கர் கோவையைப் பற்றி இவ்வாறு கூறுகிருர் :—"வங்கர் கோவையைக் குறித்து யாதும் அறியக் கூடவில்லை. 'வங்கர் குலோத்தமன் வண்கடந்தை' என வருதலால் சோழர், பாண்டியர் என்பன போன்று வங்கர் என்பதும் அரசர் குலப் பெயராமென்பதும், அக்குலத்தினர் கடந்தை என்பதைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தனர் என்பதும் அறியக்கிடக்கின்றன. தலைநகர்ப் பெயர் தடந்தை எனவும் ஒரு செய்யுளிற் காணப் படுகிறது"

களவியற் காரிகை உரையாசிரியர், வங்கர் கோவையிலிருந்து மூன்று செய்யுள்களைத் தமது உரையில் மேற்கோள் காட்டுகிருர். அச் செய்யுள்கள் இவை :

விந்தா சனிகொண்கண் வேந்தரில்
    ஆண்பிள்ளை வென்றி வெற்பிற்
கொந்தார் தினைப்புனங் காவனிற்
    பீர்வழி கூறுமென்று
வந்தார் சிலர்க்கு வழியறி
    வாரொடு வார்த்தை சொன்ஞற்
சிந்ாது காணும் பவழச் செவ்
    வாயிற் றிரு முத்தமே. 1

செங்கையில் வாங்கித் திருமுடி
    சேர்த்தி விழியி லொற்றிக்
கொங்கையின் மேல்வைத்துக் கொண்டுநின்
    ருள்கும ரித்துறையுங்
கங்கையு மாடுங் கடகளிற்
    ருன் வங்கர் காவலவன்
பொங்கெயில் சூழ்தடந் தைப்பொருப்
    பர்தந்த பூந்தழையே. 2

மடலே சொரிதொங்கல் வங்கர் குலோத்தமன் வண்கடந்தை
யடலே புரியு மரும்பனி வாடையை யஞ்சும் வஞ்சி
யுடையேயு மன்றி யுயிருங் கிடந்ததென் ருேரொருகாற்
கடலே கருங்கழி யேயுரை யீரெங்கள் காதலர்க்கே. 3

இந்நூலைப் பற்றி வேறு செய்யுள்கள் தெரியவில்லை.

87. இன்னிசை மாலை

இந்நூலைக் களவியற் காரிகை உரையாசிரியர், தமது உரையில் கூறுகிறார். இன்னிசை மாலை என்னும் பெயரை நோக்கும்போது, இது இசைத்தமிழ் நூலோ என்னும் ஐயம் உண்டாகும். இது இசைத்தமிழ் நூல் அன்று; அகப்பொருளைக் கூறும் நூல். இன்னிசை என்பதற்கு இனிய புகழ் என்பது பொருள். கொடை, வீரம் முதலியவற்றில் இசை (புகழ்பெற்ற) ஒருவர்மீது அகப்பொருள் துறைகள் அமையப் பாடப்பெற்றது இந்நூல். இந்நூல் ஆசிரியரின் பெயர் தெரியவில்லை. பாட்டுடைத் தலைவரின் பெயரும் தெரியவில்லை. இந்நூலிலிருந்து இரண்டு வெண்பாக்களைக் களவியற் காரிகையுரையாசிரியர் மேற்கோள் காட்டுகிறார். அவற்றில் ஒரு செய்யுள் சிதைந்து காணப்படுகிறது. மற்றச் செய்யுள் இது:

> தேனகு முல்லை சொரிய விடைநின்று
> மீனகு வாண்மதிபோல் வெண்கூதம்—தான்விரியும்
> கானக நாட கடனே மடனேக்கி
> யான திளையு மெனல்.

88. அரையர் கோவை

இந்நூலைக் களவியற் காரிகை உரையாசிரியர், தமது உரையில் குறிப்பிடுகிறார். இக்கோவையிலிருந்து ஒரு செய்யுளையும் தமது உரையில் மேற்கோள் காட்டுகிறார். அச்செய்யுள் இது:

> பாக்கத் திரவன்கட் பட்டதொன்
> றுண்டுபைங் கானலெங்கும்
> சேக்கைத் துணைத்தலை யோடொன் றுஞ்
> சேர்ந்தில சேர்ந்து செங்கை
> தாக்கச் சிவந்த தடந்தோட்
> டயாபரன் றஞ்சை யன்னாய்
> பூக்கட் கழித்தலைக் கொண்டைமுள்
> ளோடுண்ட புள்ளினமே.

இச்செய்யுளில் கூறப்பட்ட தயாபரன் என்னும் பெயர் பாட்டுடைத் தலைவனின் இயற்பெயர்தானா என்பது தெரியவில்லை. அவன் ஆண்ட தஞ்சை, சோழநாட்டுத் தஞ்சையா, அல்லது பாண்டிநாட்டிலிருந்த தஞ்சாக்கூர் என்னும் தஞ்சையா என்பது தெரியவில்லை.

அரையர் கோவை என்னும் இந்நூலைப் பற்றியும் இதன் ஆசிரியரைப் பற்றியும் இதன் பாட்டுடைத் தலைவரைப் பற்றியும் யாதொரு செய்தியும் தெரியவில்லை.

89. கிளவி மாலை

இப் பெயருள்ள நூல், இருந்ததென்பது களவியற் காரிகை உரையிலிருந்து தெரிகிறது. இது வெண்பாவினால் ஆன நூல். அகப்பொருளைக் கூறுவது. இந்நூலிலிருந்து நான்கு செய்யுள் களைத் தமது உரையில் மேற்கோள் காட்டுகிறார் களவியற் காரிகை யுரையாசிரியர். அவற்றில் ஒன்று இப்பொழுது சிதைந்து காணப்படுகிறது. மற்ற மூன்று செய்யுள்கள் இவை:

வெள்ளிய வள்ளத்து ளேந்தும் விரைச்சுண்ணத்
துள்ளகத்தி னெண்பவளம் வைத்தாங்குத்—தெள்ளுநீர்க்
கானலெல்லாம் பூக்குமே புன்னை களிவண்டு
பானலெல்லாம் பாடும் துறை.

கொங்கைக்குந் தூய குலவளைசேர் கோகனகச்
செங்கைக்கு மென்னவிலை செப்புவோம்—மங்கை
தெரியா மருங்குலுக்குத் தேசம்விலை யென்னத்
தரியார் மலைவாணர் தாம்.

தீய பெருவனமுஞ் செந்தறையு நந்தறையுந்
தூய பெரிவனமுஞ் சோலையுமா—மாய
கலம்பா முலைமகட்குக் காமருபூங் கண்ணிச்
சிலம்பாநின் பின்னர்ச் செலின்.

இந்நூலாசிரியர் பெயர் காலம் முதலிய வரலாறுகள் தெரியவில்லை.

90. சங்ககாலத்துப் பாரதம்

மதுரைத் தமிழ்ச்சங்கத்திலே பாண்டியர் மகாபாரதத்தைத் தமிழில் மொழி பெயர்த்தனர் என்னும் செய்தியைச் சின்ன மனூர் செப்பேட்டுச் சாசனம் கூறுகிறது. இந்தப் பாண்டிய சாசனம் சின்னமனூரில் கிடைத்தபடியால் சின்னமனூர்ச் செப் பேட்டுச் சாசனம் என்று கூறப்படுகிறது. சின்னமனூர், மதுரை மாவட்டத்துப் பெரியகுளம் தாலுகாவில் உள்ளது. இவ்வூர்ப் பெருமாள் கோயில் மடைப்பள்ளி கட்டுவதற்காக 50 ஆண்டுகளுக்கு முன் நிலத்தைத் தோண்டியபோது இந்தச் செப்பேடுகள் கிடைத்தன. இவை பெரிய செப்பேடுகள், சிறிய செப்பேடுகள் என இருவகைப்படும். இந்தச் செப்பேட்டுச் சாசனங்கள் இப்போது சென்னை அரசாங்கத்துப் பொருட் காட்சிசாலையில் உள்ளன. இவை தமிழ்மொழியிலும் வட மொழியிலும் எழுதப்பட்டவை. சின்னமனூர்ப் பெரிய செப் பேட்டின் தமிழ்ப் பகுதியில், பழைய பாண்டியரைப் பற்றிக்

கூறும் பகுதியில், பாண்டியர் தமிழ்ச்சங்கம் வைத்ததும் அச்சங்கத்தில் மகாபாரதம் தமிழில் எழுதப்பட்டதும் ஆகிய செய்திகள் கூறப்படுகின்றன. அந்தப் பகுதி வருமாறு :—

"..............வசையில் மாக்கயல் புலிசிலை வடவரை நெற்றியில் வரைந்தும் தடம்பூதம் பணிகொண்டு தடாகங்கள் பல திருத்தியும் அடும்பசிநோய் நாடகற்றி அம்பொற்சித்ர முயரியும் தலையாலங்கானத்திற் றன்னொக்க விருவேந்தரைக் கொலைவாளிற் றலைதுமித்துக் குறைத்தலை கூத்தொழித்தும் மஹாபாரதந் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் மஹாராஜரும் ஸார்வபௌமரும் தம் மகிமண்டலங் காத்திகந்தபின், வில்லவனை நெல்வேலியும் விரிபொழிற் சங்கமங்கைப் பல்லவனையும் புறங்கண்ட பராங்குசப் பஞ்சவர் தோன்றலும்............"[1]

இவ்வாறு சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டுச் சாசனம் கூறுவதிலிருந்து, சங்ககாலத்தில் மகாபாரதம் தமிழில் எழுதப்பட்ட செய்தி தெரிகிறது. இந்த மகாபாரதம் இப்போது கிடைக்கவில்லை.

91 இந்திரகாளியம்

இந்திரகாளியம் என்னும் இசைத்தமிழ் நூலை அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரைப் பாயிரத்தில் குறிப்பிடுகிறார். "பாரசவ முனிவரில் யாமளேந்திரர் செய்த இந்திரகாளியம்" என்று அவர் கூறுகிறார். எனவே, பாரசவ இனத்தைச் சேர்ந்த யாமளேந்திரர் இந்நூலைச் செய்தார் என்பது தெரிகிறது. இந்தப் பெயர்களைப் பற்றித் தக்கயாகப் பரணி உரையாசிரியர் இச் செய்திகளைக் கூறுகிறார் :—

"தேவிக்குத் திருவுடையாக உபாசக பாரசவன் சாத்துவன கௌசிகப் பட்டாடைகளேயோ ?......அன்றியும், தேவியைப் பூசிக்கும் பாரசவன் அமுது செய்விப்பன அறுசுவையடிசிலேயோ" (தேவியைப் பாடியது 15-ஆம் தாழிசையுரை).

"யாமள சாத்திரத்திற் சொல்லப்படுகின்ற ஈசுவரியின் பதினெண்கண நாதராலும் விரும்பப்படுகின்ற கோயில்" (கோயிலைப் பாடியது 1-ஆம் தாழிசை).

இவ்வாறு தக்கயாகப் பரணி உரையாசிரியர் எழுதுவதிலிருந்து, காளிதேவியைப் பூசை செய்கிற இனத்தாருக்குப் பாரசவர் என்னும் பெயர் உண்டென்பதும், யாமளம் என்பது காளி வழிபாட்டைக் கூறுகிற தந்திர நூல் என்பதும் தெரி

1. S. I. I. Vol III. Page 454.

கின்றன. எனவே, அடியார்க்குநல்லார் கூறுகிற இந்திரகாளி யத்தை இயற்றிய யாமளேந்திரர் என்னும் பாரசவர் காளிபூசை செய்பவர் என்றும் யாமளநூலை அறிந்தவர் என்றும் தெரிகிறது. ஆனால், அவருடைய இயற்பெயர் தெரியவில்லை. இந்திர காளியம், சிலப்பதிகார உரை எழுதிய அடியார்க்குநல்லார்க்கு உதவியாக இருந்தது. ஆனால், இந்த நூல் இப்போது கிடைக்க வில்லை. இந்நூலைப்பற்றிய வேறு செய்திகளும் தெரியவில்லை.

92. மதிவாணனார் நாடகத் தமிழ்நூல்

மதிவாணன் என்னும் புலவர் இயற்றியதாகலின் இந் நூலுக்கு இப்பெயர் வந்தது. சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் அடியார்க்குநல்லார் இந்நூலைப்பற்றி, "கடைச்சங்க மிரீஇய பாண்டியருள் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த முதனூல்களிலுள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க் கூத்தியன்ற மதிவாணர் நாடகத் தமிழ்நூல்" என்று எழுதுகிறார். எனவே, இது கடைச்சங்க காலத்தில் இயற்றப்பட்ட நூலாகும்.

அடியார்க்குநல்லார் தமது உரையிலே இந்நாடகத் தமிழ் நூலிலிருந்து சில சூத்திரங்களை மேற்கோள் காட்டுகிறார். அவை வருமாறு :—

"அவைதாம்
நாடகப் பிரகரணப் பிரகரணம்
ஆடிய பிரகரணம் அங்கம் என்றே
ஓதுப நன்னூல் உணர்ந்திசி னோரே.

என்றார் மதிவாணனாரும்." (சிலம்பு : அரங்கேற்று காதை 13-ஆவது வரி, உரை மேற்கோள்).

"'முன்னிய வெழினிதான் மூன்று வகைப்படும்' என்றார் மதிவாணனார்." (சிலம்பு : அரங்கேற்று காதை 109-ஆம் வரி, உரை மேற்கோள்).

"பூராடங் கார்த்திகை பூரம் பரணிகதஞ்
சீரா திரையவிட்டஞ் சித்திரையோ—டாருமற
மாசி யிடப மரிதுலை வான்கடகம்
பேசிய தேள்மிதுனம் பேசு

என்றார் மதிவாணனாரும்." (சிலம்பு : அரங்கு, 123-ஆம் வரி, உரை மேற்கோள்.)

"திருவளர ரங்கிற் சென்றினி தேறிப்
பரவுந் தேவரைப் பரவுங் காலை

மணிதிகழ் நெடுமுடி மணிபத் திரனை
யணிதிகழ் பளிங்கி னொளியினை யென்றுங்
கருந்தா துருத்த கடவுளை யென்றும்
இரும்பனைத் தனிக்கொடி யேந்தினை யென்றும்
கொடுவாய் நாஞ்சிற் படையோ யென்றும்
கடிமலர் பிணைந்த கண்ணியை யென்றும்
சேவடி போற்றிச் சிலபல வாயினும்
மூவடி முக்கால் வெள்ளையின் மொழிப.

என்றார் மதிவாணனாரெனக." (சிலம்பு : கடலாடு, 35-ஆம் வரி, உரை மேற்கோள்).

"அந்தணர் வேள்வியோ டருமறை முற்றுக
வேந்தன் வேள்வியோ டியாண்டுபல வாழ்க
வாணிக ரிருநெறி நீணிதி தழைக்க
பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக
அரங்கியற் கூத்து நிரம்பிவினை முடிக
வாழ்க நெடுமுடி கூர்கவென் வாய்ச்சொலென்
றிப்படிப் பலிகொடுத் திறைவனிற் றேருக்குச்
செப்பட வமைத்துச் செழும்புகை காட்டிச்
சேவடி தேவரை யேத்திப் பூதரை
மூவடி முக்கால் வெண்பா மொழிந்து
செவியிழுக் குறாமை வேந்தனை யேத்திக்
கவியொழுக் கத்து நின்றுழி வேந்தன்
கொடுப்பன கொடுப்ப அடுக்கு மென்ப.

என்றார் மதிவாணனாரெனக."

இந்நூல் இப்போது மறைந்துவிட்டது. இதைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

93. பாட்டியல் மரபு

இந்த யாப்பிலக்கண நூலை, யாப்பருங்கல விருத்தியுரைகாரர் தமது உரையில் குறிப்பிடுகிறார். இந் நூலாசிரியர் யார், இது எந்தக் காலத்தில் இயற்றப்பட்டது என்பன தெரியவில்லை. யாப்பருங்கல உரையாசிரியர் கீழ்க்கண்ட சூத்திரங்களை இந்நூலிலிருந்து மேற்கோள் காட்டுகிறார் :—

"ஆரிடமென்பது உலகியற் செய்யுட்கட்கோதிய உறுப்புக்களின் மிக்கும் குறைந்தும் கிடப்பன எனக்கொள்க. அவ்வாரிடச் செய்யுள் பாடுதற்குரியார் ஆக்குதற்கும் கெடுத்தற்கும் ஆற்றலுடையராகி இம்மை மறுமை முக்காலப் பண்புமுணர்ந்த விருடிகளெனக் கொள்க. என்னை ?

"உலகியற் செய்யுட் கோதிய வளவையிற்
குறையவும் விதப்பவுங் குறையா வாற்றல்
இருடிகண் மொழிதலி ஞரிட மென்ப"

எனவும்,

"ஆரிடச் செய்யுள் பாடுதற் குரியோர்
கற்றோ ரறியா வறிவுமிக் குடையோர்
மூவகைக் காலப் பண்பு முறையுணரும்
ஆற்றல் சான்ற வருந்தவத் தோரே"

எனவும் சொன்னார் பாட்டியன் மரபுடையாராகலின்."

"மனத்தது பாடு மாண்பி னோருஞ்
சினத்திற் கெடப்பாடுஞ் செவ்வி யோரு
முனிக்கணச் செய்யுண் மொழியவும் பெறுப.

என்பது பாட்டியன் மரபு." (யாப்பருங்கலம், செய்யுளியல், 40-ஆம் சூத்திர உரை மேற்கோள்).

"நான்கடி யொத்து வருவனவும், நான்கடியு மொவ்வாது வருவனவும், இரண்டடி யொத்து நான்கடியால் வருவனவும், பிறவாற்றால் வருவனவும், மாராச்சையும் மாராச்சாக்கிருதியும் முதலாகிய சாதியும் ஆரிடமும் பிரத்தார முதலாய ஆறு பிரத்தியமும்...............பாட்டியன்மரபு, பூதபுராண முதலாகிய தமிழ் நூலுள்ளும் புகுதியுடையார்வாய்க் கேட்டுக்கொள்க. அவை யீண்டுரைக்கிற் பெருகும்." (யாப்பருங்கலம் ஒழிபியல், விருத்தியுரை.)

94. அகத்தியர் பாட்டியல்

பரஞ்சோதியார் இயற்றிய சிதம்பரப் பாட்டியலில்,

"பாமேவு தமிழ்ப் பொதியக் குறுமுனிவன் கூறும்
பாட்டியலைச் சுருக்கமதாய்ப் பகர்ந்திடுவேன் யானே"

என்று கூறுகிறபடியினால், அகத்தியர் பாட்டியல் என்னும் ஒருநூல் இருந்ததென்பது தெரிகிறது. அன்றியும், பன்னிரு பாட்டியல் என்னும் நூலில், அகத்தியர் பாட்டியலிலிருந்து எடுக்கப்பட்ட இரண்டு சூத்திரங்கள் காணப்படுகின்றன. எனவே, அகத்தியர் பாட்டியல் என்னும் பெயருள்ள ஒரு செய்யுளிலக்கண நூல் இருந்ததென்பது ஐயமற விளங்குகிறது.

அகத்திய முனிவர் தம் பெயரால் அகத்தியம் என்னும் முத்தமிழ் இலக்கண நூலை இயற்றினார் என்பர். அது சிற்றகத்தியம் பேரகத்தியம் என்று இருவகைபபடும் எனவும் கூறுவர்.

(தொடரும்)

வள்ளுவத்தில் மருத்துவம்

[வித்துவான் திரு. செந்துறை முத்து]

உலகில் பல மகான்களால் பல தத்துவங்கள் தோன்றின. இன்று நாட்டில் காந்தி மகானின் தத்துவத்தைக் காந்தியம் என்று பேசியும் எழுதியும் வருகின்றனர். அதே போன்றுதான் வள்ளுவரால் தோற்றுவிக்கப்பட்ட தத்துவங்கள் அனைத்தும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே 'வள்ளுவம்' என்று வழங்கியும், வரைந்தும் வந்திருக்கின்றது அறிஞர் உலகம் வள்ளுவத்தில் காணக்கூடும் தத்துவங்கள் உலகிற்கே யுகந்தது என்பதை அனைவரும் அறிவர் அத் தத்துவங்கள் மக்களின் அன்றாட வாழ்க்கையில் அறநெறி பிறழாது சிறந்து விளங்கி உண்மை வாழ்க்கையை விளக்கும் கருவியாக உள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது.

இவ்வுலகிடையில் இயற்கையில் எழும இன்னல்கள் பல வாகும். அவை பிணி, வறுமை, புயல், வெள்ளம் முதலியன வாகும். இவ்வியற்கை இன்னல்களில் மக்கள் எங்ஙனம் வாழ வேண்டும் என்பதைத்தான் வள்ளுவம் விளம்புகின்றது.

நாட்டிலே பஞ்சம் என்னும் பிணி, அடிக்கடி தோன்றி மனித இனத்தை அல்லலில் ஆழ்த்தி வருகின்றது. இப் பஞ்சத்தின் மிகுதியால் மக்கள் பசி பொறுக்க இயலாமல் இறக்க நேரிடுகின்றது. இதனால் பல குடும்பங்கள் பாழ்படுகின்றன. இங்ஙனம் பசியால் உயிர்விடும் மக்களைப் பசியால் இறக்கவில்லை யென்று இன்றைய பதவிப் பித்தர்கள் பிதற்றுகின்றனர்.

மக்களைத் துன்புறுத்தும் பிணி பலவற்றுள், பசிப்பிணி மிகக் கொடியதாகும். அதில் மககள் படும் துன்பமே பெருந் துன்பமாகும். ஏனைய பிணிகளுக்கும் இப்பிணிதான் அடிப் படையாக அமைகின்றது. இதைததான் வள்ளுவர், வள்ளலார் முதலிய மகான்கள் விளம்பியுள்ளனர்.

வள்ளுவத்தில் பசிப்பிணியைப்பற்றிக் கூறுமிடத்து பெரும் பிணியாகிய பசிப்பிணியை நீககுதலே மக்களாற்றும் தொண்டில் பெருந் தொண்டாகும். இப் பசிப்பிணி மனித இனத்தில் மட்டுமின்றி மற்ற இனததிலும் தோன்றித் துன்பத்தைக் கொடுப்பதாகும். அத்துடன் நில்லாமல் அவ்வப்போது அவற்றின் வாழ்க்கையில் ஒரு பெருத்த மாற்றத்தை உண்டாக்குகின்றது. மற்றைப் பிணியெனில் அத்தகைய மாற்றங்களை உண்டாக்குவ

தின்று. எனவே, பசிப்பிணி மட்டும் எல்லா உயிர்களிடத்தும் தோன்றும் பிணியாகும். இப் பிணியினும் மிஞ்சியதொரு பிணி இன்று என்பதை வள்ளுவத்தில் 'பசியென்னும் தீப்பிணி' என்று காண்பதோடன்றி அன்றாட வாழ்க்கையிலும் கண்டு வருகின்றோம்.

இக் கொடிய பிணிக்குரிய மருந்து யாதெனின், சோறும் நீருமேயாகும். எனவேதான், 'உண்டிகொடுத்தவர் உயிர்கொடுத் தவராவர்' என்று விளம்பினர் ஆன்றோர். அப் பிணியின் கொடுமையைக் கண்ட பெரியர் வள்ளலார் அவர்கள், அப் பிணி யைக் கண்டு வெறுத்துக் கூறுமிடத்து :

குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண்அணி களையும் மாண்எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி.

என்றுவரும் மணிமேகலைப் பாட்டடிகளை எடுத்துக்கூறி, பின் தான் அதை நீக்குவான வேண்டிப் பெருமுயற்சி யெடுத்தார். பசியால் நலிந்து வரும் மக்களுக்குற்ற துன்பத்தை நீக்கத் தருமச்சாலை ஒன்று அமைக்க அரும்பாடுபட்டார் என்று அறிகின்றோம்.

வள்ளுவத்தை நோக்குமிடத்து, இல்லறத்தில் வாழுமொரு வன் தன்னிடமுள்ள பொருளை இல்லையென்னாது யாசிக்கும் மக்களுக்கு ஈந்தருள வேண்டும்; அங்ஙனம் கொடுத்து வாழு மிடத்து எதிர் பயன் கருதல் கூடாது; பயன் கருதிக் கொடுத் தல், பசிப்பிணிக்குரிய மருந்தாகாது என்று விளக்கப்பட்டுள் ளதைக் காண்கின்றோம். இம்முறை எம் மகனிடம் உண்டென் பதைக் கூறவந்த வள்ளுவர்,

"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள"

என்று கூறிச் சென்றார். ஒருவன் எவ்வளவுதான் பொருளைச் சேர்த்து வைத்தாலும், வறியவரின் கடும் பசியையாயினும நீக்க வேண்டும்: அங்ஙனம செய்வதுதான் பிற்காலத்தில் தான் வாழ்வதற்கு அப்பொருளைச் சேர்த்துவைக்கு மிடமாகும். எனவே, தான் பெற்ற பொருள்களை இல்லையென்னாது, அன்பு மொழியால், இனிய முகத்துடன் வரவேற்று அருள்கூர்ந்த பார்வையாளனாய், அமுதான உணவையும் பலரோடு பகுத்துண் ணும் பண்புடையவனிடம் பசியென்னும் தீப்பிணி தீண்டுவ தில்லை யென்பதை,

"பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது"

என்று வள்ளுவத்தில் தீட்டப்பட்டுள்ளது. இங்ஙனம் வள்ளுவத்தில் பசியென்னும் பிணியையும், அதன் மருந்தையும், அதை நீக்கும் மருத்துவனையும் கூறப்பட்டுள்ள தன்மை தனிச்சிறப்புடையதென்பதை எவரும் மறுக்கார். மேலும் பொய்யாமொழியின் வாயினின்றுதிர்ந்த பொன்மொழிச் சொல்லாகிய,

"இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்"

என்ற சொல்லை அறிந்து, அதன் நுண்பொருளை நன்கு ஆய்ந்து உள்ளத்தில் இருத்தி, உறுதியான நெறியில் நின்று, உலகிற்கு ஒப்பற்றவனாய், பிறர் நலத்தைப் பேணி, பிறர் வாழ்வையே தன் வாழ்வாகக் கருதி வாழ்ந்து பேரும் புகழும் பெற்று விளங்கிய ஒரு மருத்துவனை ஈண்டு நினைவுறுத்த விழைகின்றேன். அவன் யாரெனின்: அவன்தான் பண்ணன் என்னும் பெருமகன்!

அவன் எங்குப் பிறந்தான், வாழ்ந்தான் என்றறிய முற்படுவது இயல்பே வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி வழிந்தோடும் சோணாட்டின் கண்ணே, காவிரியருகில் சிறுகுடி என்றொரு சிற்றூர் இருந்தது. அவ்வூரின்கண் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்குமுன்பு பண்ணன் என்ற பெருமகன் தோன்றினன். இவன் படை வலிமையிலும் கொடை வலிமையிலும் மிகச் சிறந்து விளங்கினன்

புவியுற்ற மனிதனிடம் பொருந்த வேண்டிய பெரும்பொருளாகிய வீரம், வள்ளன்மை இரண்டும் இரண்டறக் கலந்து காணல்வேண்டும். ஈண்டுப் பண்ணன் ஒப்புரவும், ஈகையுமாகிய செப்பருங்குணங்களைச் சிந்தையாலும் நினைக்க இயலாவகையில் மிக்குக் காணப்பட்டான். 'சோழநாடு சோறுடைத்து' என்றொரு ஆன்றோர் மொழிவழக்குண்டன்றோ! அதன்படி சோணாட்டு மருத்துவன் பண்ணன் என்று சொல்லத்தக்க நிலையில் மக்களுக்கு உதவிப்பணிகள் செய்து உயர்ந்து விளங்கினன் என்று வரலாற்றிலும், இலக்கியத்திலும் காணமுடிகின்றது.

அம்மகனுக்கிருந்த மாந்தோப்பும், பூஞ்சோலையும், நெல் விக்காவும், தடாகமும் அளவுடையதன்று! எத்துணைக் கழனிகள்! எத்துணைக் களங்கள்! எத்துணைக் குவியல்கள் என்று அறுதியிட்டுரைக்க லாகாதெனினும், அன்னான் கருணையுள்ளமும் கனிந்த பார்வையுடையவனன்றோ! ஆகையால், அவை

யனைத்தையும் தனக்கெனப் பேணுது வாழத் தொடங்கினுன்; வறியோரின் வாழ்க்கையை வளமாக்கினுன்.

அன்னுனின் குடிக்கண் அடி வைக்கும் பாணராயினும், கூத்தராயினும், புலவராயினும், மற்று யாவராயினும் பண்ணனுடைய தடாகத்தில் நீராடி, பூங்காவினுள் புகுந்து மலர்சூடி, தோப்பினுள்ளும் காவினுள்ளும் நுழைந்து பழுத்த கனிகளைப் பறித்து உண்பர். இங்ஙனம் உண்டுசென்ற மக்கள் பலராவர். அப் பலரும் பண்ணனின் பெருங்குண நலனை நோக்கி "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் பண்ணன்" எனவும் "பசிப்பிணி மருத்துவன் பண்ணன்" எனவும் புகழ்ந்தேத்திச் சென்றனர்

புலவனுகவும் பேரரசனுகவும் விளங்கிய குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்பவன் பண்ணனைப் புகழ்ந்து பாடிய பாடலை,

"யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய"

என்ற வாழ்த்துடனேயே தொடங்கிப் பாடினுர். அப்பாட்டின்கண் பண்ணனின் குடியைச் சிறப்பிக்குமிடத்து, நன்கு பழுத்த மரத்தின்கண் பறவைகள் ஒலித்தாற்போல் பண்ணனுடைய இல்லத்தில் உணவு உண்பவர்களின் ஆரவாரம் கேட்குமெனவும், மழைபெய்யும் காலத்தைக் கண்டு தன் முட்டைகளைச் சுமந்து திட்டையேறும் சிற்றெறும்பின் வரிசையைப்போல் சுற்றத்துடன் கூடிய பாண்சிறுவர்கள் சோற்றுத்திரளுடன் கூடிய கையுடன் வரிசை வரிசையாகச் செல்வர் எனவும் அழகாக எடுத்துக் கூறுகின்றனர்.

மற்றும் தன் பாடலில் கிள்ளிவளவன் "யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய" என்று பாடிய அடியின் பொருளைச் சிறிது நோக்கல் இன்றியமையாதது. யான் வாழும் நாட்களையும் பண்ணன் பெற்றுப் பன்னுள் வாழ்வாஞக என்று கூறி மகிழ்கின்றுர்; நாட்டில் வாழும் உயிர்களுக்கெல்லாம் தலைவன், பாதுகாவலன் அங்ஙனம் பாடுகின்றுனெனில் பண்ணன்மீது அவனுக்கிருந்த பேரன்புதான் என்னே! தன் வாழ்நாளையும் அளிக்க விரும்பினுனெனில் பண்ணனின் கருணைதான் என்னே! எனவேதான் "பசிப்பிணி மருத்துவன் இல்லம்" என்று பண்ணனின் இல்லிற்குப் பட்டப்பெயர் அமைந்தது.

இப்பெருமகன் வள்ளுவத்தில் கூறியவண்ணம் பசியென்னும் தீப்பிணியைப் போக்கி மக்களைக் காத்த மருத்துவன் என்பது நம்மனேர்க்குத் தெள்ளத்தெளிய விளங்குகின்றதன்றே!

ஒப்பற்ற முப்பற்று

[நாகை, திரு. வேலன்]

ஒன்றினை யொன்று பற்றி உறைவதும்
உயிர்நிலை அன்பின் வழியது ஆதலும்
உலகின் இயற்கை என்பதை உணரின்
ஒப்பிலா மூன்று பற்றுகள் உலகில்
அடிப்படை யாதல் தெற்றென விளங்கும்
அம்முப் பற்றில் தாய்மொழிப் பற்றே
அடிமுத லாக அமைவது சான்றீர்
மொழிப்பற் றதுவே முளையது வாகி
இனப்பற் றெனுமோர் இணையிலாப் பற்றாய்த்
தளிர்விட் டோங்கித் தழைத்திட வளரும்
தாய்மொழிப் பற்றும் தன்னினப் பற்றும்
தழைத்திடில் நாட்டுப் பற்றெனும் மரமும்
உயர்ந்திடக் காண்போம் உண்மையே அன்றோ?
உயர்ந்திடும் அம்மரம் ஒன்றே உதிர்த்திடும்
நாட்டு நலனெனும் நற்றீங் கனியாம்.
எனவே என்னருந் தமிழா கேள்நீ
உன்னுடை நாட்டில் உயர்தனிச் செம்மொழி
உயர்நிலை எய்திட எண்ணுவை ஆயின்
இதயந் தன்னில் இனப்பற் றேற்று
நாட்டுப் பற்றில் நாட்டம் செலுத்து
இவ்விரு பற்றும் இல்லா தொழியின்
இல்லை உன்மொழிக் கேற்றம் அறிவாய்
ஒப்பிலா இந்த முப்பெரும் பற்றும்
ஒன்றிடும் போதே உண்மை விடுதலை
அடைவாய் அடைவாய் அட்டியில் லையே.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) தமிழ் மொழியின் மாண்பு

தமிழ் மொழியின் மாண்பு குறித்து 31-7-54 'இந்து' இதழில் **சீ. துன்ஹன்ராஜா** என்பவர் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதன் மொழி பெயர்ப்பு கீழே தரப்படுகிறது :—

தமிழ்மொழி மாண்புமிக்கதோர் மொழி. இதற்குக் காரணம் அது பழைமையானது, அல்லது அது வளமான சொற்றொடர்களைக் கொண்டது என்பதல்ல. அதனிடம் சிறந்த இலக்கியங்கள் உள்ளன. இதுவே தமிழின் சிறப்புக்குக் காரணம். மொழிகள் பல நூற்றாண்டுகள் வாழலாம்; பிற மொழிகளினின்று சொற்களைக் கடன் வாங்கலாம்; ஆனால், இவற்றின்மூலம் அவை சிறந்தவை ஆகிவிடமுடியாது. அவை கருத்தைச் சரிவர வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றவை ஆகிவிட முடியாது. தனித்த ஒருசொல் தனித்த ஒரு பொருளைத் தந்துவிட முடியாது. அதனை ஒரு சொற்றொடரில் அமைத்துப் பார்க்கின்ற போதுதான் அதன் நிலைக்குரிய பொருள் விளங்கும். ஒரே சொல் பல சூழ்நிலைகளில் பல பொருளைத் தரக்கூடும். எனவே, சொற்களின் பொருட் செறிவைத் தெளிய வைப்பவை, அகராதிகள் அல்ல. கற்றறிந்த பெரியோர்கள் இடம், பொருள், ஏவல்களுக்கேற்பக் கொள்ளும் பொருளே முடிந்த பொருளாகும்.

வடமொழிக் கலப்பால் தமிழ் ஆக்கம் பெறுவதாகப் பேசுகிறவர்களெல்லாம், தமிழ்மொழியால் வடமொழி எத்துணை வளமும் வாழ்வும் பெற்றது என்பதை வலியுறுத்தவோ சுட்டிக்காட்டவோ தவறிவிடுகிறார்கள். வடமொழியாக்கத்தை முழு அளவில் காணவேண்டுமானால், அதற்குத் தமிழை நன்கு கற்றல் வேண்டும். போதிய தமிழ்க்கல்வி இல்லாமல் வடமொழியை அறிய இயலாது. வேதகால வடமொழியில் திராவிடமொழி நிறைய ஆதிக்கம் பெற்றிருந்தது. மற்ற ஆரிய மொழிகளுக்கும் பண்டைய சமஸ்கிருதத்துக்கும் நிறைய வேற்றுமைகள் உண்டு. பண்டை வடமொழி திராவிட மொழிகளுடன் நெருங்கிய தொடர்புடையது. சமஸ்கிருதத்தில் திராவிடமொழி கலப்பின் காரணமாகவே வட இந்திய ஆரிய மொழிகளில் மாறுதல்கள் ஏற்பட்டன.

இதுபோலவே, இந்தியநாடு அயல்நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புக்கும் வடமொழியைவிடத் தமிழ் மொழியே முதன்மைபெற்று விளங்கிற்று எனலாம். அயல்நாட்டுச் சொற்களான Rice அரிசி, Sugar சருக்கரை, Sandal சந்தனம் முதலியன திராவிட மொழிகளிலிருந்து கடன் வாங்கப்பெற்றவையேயாகும். இதற்கெல்லாம் காரணம் பண்டைத் தமிழ்ப் புலவர்களின் அறிவாற்றலேயாம். அவர்களுடைய

கருத்துக்களும், அக்கருத்துக்களை அவர்கள் வெளியிட்ட முறையுமே இதற்கு உறுதுணை புரிந்தன.

எனவே, சொற்றொகுதிகளைக் கொண்டு மாத்திரம் தமிழை இந்தி முதலிய பிறமொழிகளோடு ஒப்பிடுவது சரியல்ல. தமிழ் மொழியைப் போல் பிற மொழிகளில் கருத்து வளம் இல்லை என்பதே ஏற்றகாரண மாகும்.

(உ) சென்னைமாநில அருள்நெறி மாநாடு

அருள்நெறி மாநாடு தேவகோட்டையில் 13-7-54-ஆம் நாள் திரு. எஸ். மீனாட்சிசுந்தரனார் தலைமையில் நிகழ்ந்தது. இன்றியமையாத பல முடிபுகள் சமயம்பற்றி முடிவுசெய்யப்பட்டன. பல அறிஞர்கள் அருள்நெறி பற்றிய சொற்பொழிவாற்றினர். குன்றக்குடி அடிகளாரின் வாழ்த்துரையுடன் திருக்கூட்டச் செயலாளர் திரு. அழ. அரு. சோம. நாராயணன் செட்டியார் நன்றிகூற இனிது முடிந்தது.

(ங) குமரகுருபரசுவாமிகள் உயர் தொடக்கப்பள்ளித் தொடக்கம்

திருப்பனந்தாள் மறைத்திரு. காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள், தம் திருவுள்ளப்பாங்கினால் பல பேரறங்கள் செய்து போதருகின்றார்கள். அவற்றுள் ஒன்று, தஞ்சைமாவட்டக் கழகத்தா ரிடமிருந்து உயர் தொடக்கப்பள்ளிப் பொறுப்பைத் தாம் ஏற்றுக் கொண்டு, அதற்கு 1-9-'54-இல் தொடக்கவிழா நிகழ்த்தி அதற்குக் 'குமரகுருபரசுவாமிகள் உயர் தொடக்கப்பள்ளி' எனப் பெயரமைத்து நடத்திவர முன்வந்துள்ளார்கள்.

குறிப்பு: அடிகளாரின் மொழித்தொண்டும், நாட்டுத் தொண்டும், நெறித்தொண்டும் பொன்னேபோற் போற்றத்தகுந்தன. இன்னும் பல்லறங்கள் செய்து அடிகளின் திருவடிகள் பன்னெடுங்காலம் வாழிய.

(ச) மாணவர் ஆட்சிமன்றத் திறப்புவிழா

வாலாசாபாத்து இந்துமத பாடசாலையின் வள்ளலார் மாணவர் இல்லத்தின், மாணவர் பாராள்மன்றத் திறப்புவிழா சென்னை மாநில அரிசன வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. B. பரமேசுவரன் அவர்கள் தலைமையில் 25-8-54-ல் நிகழ்வுற்றது.

குறிப்பு: வருங்கால மாந்தர்களாக இலகும் மாணவர்கள், இவ் விளம்பருவமுதலே நாட்டு நல்லமைச்சு நெறியிற் படர்தற்கு வாய்ப் பளிக்கும் முறையில் இவ்வாறான மன்றத்தைத் துவக்கிப் பயிற்சியளிக் கும் பாடசாலை முதல்வரின் அரும்பெறற்பணி போற்றற்குரியது; பெரிதும் பாராட்டுகின்றோம்.

மதிப்புரை

(க) தமிழிசைப் பாடல்கள் பத்தொன்பதாம் தொகுதி
திருப்புகழ் சுரதாளக் குறிப்புடன்:

[இசைப்படுத்தியவர், காஞ்சிபுரம் இசைப்பெரும் புலவர் திரு. நாயனுப்பிள்ளையவர்கள். வெளியிட்டது, அண்ணுமலைப் பல்கலைக் கழகம். முன்னுரையுடன் உ0ச பக்கம்.]

இசை, கல்லையும் உருக்கும் கனிவுடையது. அதினும் தமிழிசை, கற்பார், கேட்பார் நெஞ்சைக் கரைக்கும் நீர்மையது. அவ்விசை பல்வகைப் பாக்களால் இயன்று படர்வது; அவற்றுள் வண்ணப் பாக்கள், இசையின் ஏற்றத்தை மிகுவிப்பன; இப்பாக்களால் இயன்றன, செவ்வேற்சேயின் திருவருள்பெற்ற அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாக்கள். இவை, இசை இன்பத்தோடு இறை இன்பில் கூட்டுவிப்பன. இத்தகைய தமிழிசைப் பாடல்களாகிய திருப்புகழில் நூற்றெரு பாடல்களுக்கு இராகம் மேளம் தாளம் இவைகளின் குறிப்புக்களுடன், அவைகட்கேற்ற குறியீடுகளும் அமைத்து அழகிய முறையுடன் வெளியிட்டுள்ளனர். இப்பாடல் நூற்றொன்றில் முதல் (ருO) பாடல்களுக்குக் காஞ்சிபுரம் இசைப்பெரும் புலவர் திரு. நாயனுப் பிள்ளை யென்னும் சுப்பிரமணிய பிள்ளையவர்களாலும், பின் (ருக) பாடல்களுக்கு இசைமன்னர் சித்தூர்ச் சுப்பிரமணிய பிள்ளையவர்களாலும் சுர தாளக் குறிப்புக்கள் எழுதப்பெற்று வெளிவந்துள்ளது. கண்கவர் வனப்புடன் மிளிர்கின்றது.

தமிழிசை மங்கிக்கிடந்த நாளில் அதற்கு உயிரூட்டியவர்கள் இராசா சர். அண்ணுமலைச் செட்டியாரவர்கள். அவர்கள் நிறுவிய பல்கலைக் கழகத்தில் இத்தகைய இசை நூல்கள் வெளியிடுவது போற்றற்குரியதே. இசைவாணரும் இசைச் சுவைஞரும் இசைபயில்வோரும் கற்றுத்துறைபோக வேண்டிய அரிய நூல்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகம், இதுபோன்ற அரிய பெரிய இசை நூல்களை வெளியிடுந் துறையில் இன்னும் ஊக்கமுற்று நூல்கள் வெளியிட்டுத் தமிழிசையை உலக அரங்கில் நடமாடச் செய்யும் வாய்ப்பை அளிக்குமாறு வேண்டுகின்றேம்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்

தோற்றம் :	மறைவு :
1876	26-9-1954